Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

MONDAY, AUGUST 23, 2021

திங்கட்கிழமை ஒகஸ்ட் 23, 2021 | ஒளி: 07 கதிர்: 81 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

## மூன்றாவது டோஸ்



மக்களுக்கு மூன்றாவது தடுப்பூசி டோஸ் வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. ஆகையால், மூன்றாவது தடுப்பூசியையும் பெற்றுக்கொள்வதற்கு தயாராக இருக்குமாறு கொவிட்-19 செயலணியின் பிரதானியான இராணுவத் தளபதி ஜெனரல் ஷவேந்திர சில்வா, நேற்று (22) தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# 21 யோசனைகளை செயற்படுத்தினால் மக்களிடம் மண்டியிடத் தேவையில்லை



ஐக்கிய தேசிய கட்சியால் முன்வைக்கப்பட்ட 21 யோசனைகளை செயற்படுத்தினால், அர்ப்பணிப்புச் செய்யத் தயாராகுமாறு மக்களுக்கு அறிவிக்க வேண்டிய அவசியம், ஜனாதிபதிக்கு ஏற்பட்டிருக்காது என, ஐக்கிய தேசிய கட்சியின் பிரதித் தலைவர் ருவன் விஜேவர்தன தெரிவித்தார். குறித்த 21 யோசனைகள் அடங்கிய ஆவணம், கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவால் கடந்தவாரம் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டதாகத் தெரிவித்த அவர், சுகாதாரம், பொருளாதாரம் ஆகியவை பலப்படுத்தப்பட்ட நாட்டை உருவாக்குவதற்கான யோசனைகளே அதில் உள்ளடக்கப்பட்டுள்ளன என்றார்.

கட்சியின் 75ஆவது ஆண்டு நிறைவு தொடர்பில், நேற்று (22) கட்சி செயற்பாட்டாளர்களுடன் இணையவழி ஊடாக இடம்பெற்ற கலந்துந்துரையாடலிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், கொரோனா நெருக்கடி அதிகரித்துச் செல்லும் நிலையில், ஏனைய கட்சிகளைப் போல் அல்லாமல், அரசாங்கத்தை விமர்சிக்கும் அதேவேளை, எமது மாற்று வழிக் கொள்கைகளையும் முன்வைத்துள்ளோம்.

தாமதித்தேனும் 3 வாரங்களுக்கு நாட்டை மூட அரசாங்கம் தீர்மானித்துள்ளது. ஆனால், வீதிக்குச் சென்று பார்த்தால், பொதுமக்கள் வீதிகளில் நிற்கின்றனர். எம்மைப் பொறுத்தவரையில், இவ்வாறானதொரு முடக்கத்தை நாம் கோரவில்லை. விசேட வைத்தியர்கள் கூறுவதைப் போன்ற முடக்கமே இப்போது அவசியம் என்றார்.

கடந்த வெள்ளிக்கிழமை, நாட்டு மக்களுக்கு உரையாற்றிய ஜனாதிபதியின் உரையின் சாராம்சத்தைப் பார்த்தால், எமது அரசாங்கம் அரச பணியாளர்களுக்காக அதிகரித்த 10,000 ரூபாயை இல்லாமல் செய்வதற்கே முயலுகின்றனர் என்றார். அத்துடன், தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை, மீண்டும் மந்த நிலையில் இடம்பெறுவதாகத் தெரிவித்த அவர், எனவே, தடுப்பூசி செலுத்துவதை விரைவுப்படுத்த வேண்டும் என்பதுடன், கொரோனா தொடர்பான செயற்பாடுகளை விரிவுபடுத்த வேண்டும் என்றார்.

மேலும், கொரோனா ஒழிப்புத் தொடர்பில், அந்தச் செயலணிக்கு எவ்விதச் சட்ட அதிகார ஏற்பாடுகளும் இல்லை எனத் தெரிவித்த அவர், அதன் முழு அதிகாரமும் சுகாதார அமைச்சு, அனர்த்த முகாமைத்துவ பிரிவு, சுகாதார சேவை திணைக்களங்களுக்கே உள்ளதால், இந்தச் செயலணியை உடனடியாக நீக்கி, இதன் பொறுப்புகளை அமைச்சரவை ஏற்க வேண்டும் என்றார்.

தொடர்ச்சி P2



## ரங்கோலியில் நடனமாடிய 45 கலைஞர்களுக்கு கொரோனா

■ சேஹ்ன் செனவிரத்ன

கண்டி, எசல பெரஹெரவில் கலந்துகொண்ட நடனக் கலைஞர்கள் 45 பேருக்கு தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

தொடர்ச்சி P2

## வகையை தேடி காத்திருக்க வேண்டாம்



### மரணிப்பவர்களில் 70 முதல் 80 சதவீதமானோர், எந்தவொரு கொவிட்-19 தடுப்பூசியையும் பெற்றுக்கொள்ளாதவர்கள்

அந்தவகை தடுப்பூசியே நல்லது; அது கிடைத்தால் ஏற்றிக்கொள்வேன் என வகைகளைத் தேடிக் காத்திருக்காமல், கிடைக்கும் கொவிட்-19 தடுப்பூசிகளை ஏற்றிக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2



## கொழும்பில் நேற்று

நாடு முழுவதும் தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் கடந்த வெள்ளிக்கிழமை (20) நள்ளிரவு முதல் அமல்படுத்தப்பட்டது. இந்நிலையில், கொழும்பில் நேற்று (22) பிடிக்கப்பட்ட படம்.

(படப்பிடிப்பு: பிரதீப் தில்ருக்ஷன)



## காஸ் தட்டுப்பாட்டுக்கு இன்றுடன் முற்றுப்புள்ளி

உள்ளூர் சந்தையில் கடந்த வாரம் நிலவிய சமையல் எரிவாயு (காஸ்) தட்டுப்பாட்டுக்கு இன்றுடன் முற்றுப்புள்ளி வைக்கப்படும் என, கூட்டுறவுச் சேவைகள், சந்தைப்படுத்தல் அபிவிருந்தி மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சு அறிவித்துள்ளது.

தொடர்ச்சி P2



## கொரோனா நாடகமாடி கணவனை கொன்ற மனைவிக்கு விளக்கமறியல்

### மோட்டார் சைக்கிளில் வந்த காதலனும் சிக்கினார்

■ அஜித்லால் சாந்த உதய

கணவனுக்கு பாலில் தூக்கமாத்திரை கொடுத்து, தனது காதலனுடன் சேர்ந்து மூச்சுத் திணறடிக்கச் செய்து, அவரைப் படுகொலை செய்த குற்றச்சாட்டின் கீழ், எட்டு வயது நிரம்பிய ஒரு பிள்ளையின் தாயும், அவரது காதலனும் கைது செய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவின் பேரில், இம்மாதம் 30ஆம் திகதி வரையிலும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2

## தடுப்பூசி ஏற்றியோருக்கே அத்தியாவசிய அனுமதி

தடுப்பூசி ஏற்றிக்கொண்டவர்கள் மாத்திரமே, கொழும்பு மாவட்டத்தில் வீடுகளுக்குச் சென்று அத்தியாவசிய பொருள்களை விநியோகிக்க முடியுமென, கொழும்பு மாவட்ட செயலாளர் பிரதீப் யசரத்ன தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## இறால் தொட்டியில் விழுந்து இளைஞன் பலி

■ ரஸீன் ரஸ்மின்

சிலாபம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அம்பகந்தவில பிரதேசத்தில் இறால் வளர்க்கப்படும் நீர்த்தொட்டியில் (டேங்) விழுந்த, மெத்தேதென்ன வத்தை, வேவெல்தெனிய பகுதியைச் சேர்ந்த 27 வயதான இளைஞன் உயிரிழந்துள்ளார்.

தொடர்ச்சி P2

### வாழ்வாதாரத்தை இழந்த குடும்பங்களுக்கு



## இன்றிலிருந்து ரூ.2,000 நிவாரண தொகை

நாடளாவிய ரீதியில் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமல்படுத்தப்பட்டிருப்பதால், தமது வாழ்வாதாரத்தை இழந்த குடும்பங்களுக்கு, அரசாங்கத்தால் கொடுக்கப்படும் 2,000 ரூபாய் நிவாரணக் கொடுப்பனவு, இன்றிலிருந்து (23) வழங்கப்படவுள்ளது.

தொடர்ச்சி P2

## பிக்குவின் வாகனத்திலிருந்து 25 மதுபான போத்தல்கள் மீட்பு

■ சேஹ்ன் செனவிரத்ன

கண்டியிலுள்ள பிரபல பிக்கு ஒருவருக்குச் சொந்தமான அதிசொகுசு வாகனம், மற்றுமொரு வர்த்தகரின் வாகனமொன்றிலிருந்து 145 மதுபான போத்தல்கள் மெனிக்ஹின்ன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

தொடர்ச்சி P2

## நடமாடியோருக்கு திடீர் 'அன்டிஜன்'



■ என்ராஜ்

தற்போது அமலில் உள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டக் காலத்தில், யாழ்ப்பாணம் நகரில் நடமாடியோருக்கு, யாழ்ப்பாணம் மாநகர சபையின் பொதுச் சுகாதார பிரிவால் அன்டிஜன் பரிசோதனை மேற்கொள்ளும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2



## 4ஆவது அலை உச்சத்தில் இருக்கும் போது பாகிஸ்தான் உதவியது

### நன்றி கூறினார் பிரதமர் மஹிந்த

பாகிஸ்தானின் உயர் ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் (ஓய்வு பெற்ற) முஹம்மது சாத் கட்டக், துணை உயர் ஸ்தானிகர் தன்வீர் அஹ்மத் ஆகியோர், இலங்கை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கடந்த 21ஆம் திகதியன்று சந்தித்தனர்.

தொடர்ச்சி P2



## கிளிநொச்சி விபத்தில் ஒருவர் பலி

கிளிநொச்சி ஏ-9 பிரதான வீதியில், நேற்று (22) மாலை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் பலியானார். அச்சம்பவத்தில் படுகாயமடைந்த மற்றொருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

LK Newspaper vibe community

PAGE 1 தொடர்ச்சிகள்

## 21 யோசனைகளை செயற்படுத்தினால் மக்களிடம் மண்டியிட தேவையில்லை

அதற்கமைய, சம்பந்தப்பட்ட அமைச்சர்கள், எதிர்க்கட்சி தலைவர், உறுப்பினர்கள் மற்றும் அதிகாரிகளுடன் கூடிய அனர்த்த முகாமைத்துவ சபையை உடனடியாக கூட்ட வேண்டும் என்ற யோசனையை முன்வைப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

## ரங்தோலியில் நடனமாடிய 45 கலைஞர்களுக்கு கொரோனா

இவர்கள் கதிர்காம முருகன் கோவிலைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நடனக் கலைஞர்களும் என்றும் இந்தக் குழுவில் 76 நடனக் கலைஞர்கள் உள்ளனர் என்றும் எனினும், அவர்களுள் 45 பேருக்கே தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

கண்டியில் நேற்று முன்தினம் (21) நடைபெற்ற ரந்தோலி ஊர்வலத்தின் பின்னர், அவர்களுக்கு அன்டிஜன் பரிசோதனை செய்யப்பட்டதுடன், இதில் 45 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டதையடுத்து, அவர்கள் உடனடியாக பெரஹெரவில் இருந்து விலக்கப்பட்டதுடன், அவர்களுடன் தொடர்பிலிருந்தவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

## தடுப்பூசி ஏற்றியோருக்கே அத்தியாவசிய அனுமதி

கடந்த முறைகளை விட, இம்முறை இந்த விடயம் குறித்து தீவிரக் கண்காணிப்புகள் முன்னெடுக்கப்படுவதாகவும், நுகர்வோர் அதிகார சபையின் அதிகாரிகளும் இது தொடர்பான சுற்றிவளைப்புகளை முன்னெடுப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேபோல் நடமாடும் வர்த்தகர்களிடம் பொருள்களை கொள்வனவு செய்யும் போது, ஏதேனும் அசௌகரியங்கள் ஏற்படுமாயின் அது குறித்து, மாவட்டச் செயலாளர் அலுவலகம், கிராம உத்தியோகத்தர் அல்லது நுகர்வோர் அதிகார சபைக்கு அறிவிக்க முடியும் என்றும் கொழும்பு மாவட்டச் செயலாளர் பிரதீப் யசரத்ன தெரிவித்துள்ளார்.

## இறால் தொட்டியில் விழுந்து இளைஞன் பலி

சம்பவம் நடைபெற்ற நேற்று முன்தினம் (21) இரவு அத்தொட்டியில் விழுந்த இளைஞனை மீட்ட அங்கிருந்தவர்கள், சிலாபம் வைத்தியசாலையில் உடனடியாக அனுமதித்தனர். எனினும், அங்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இது பற்றி சிலாபம் பொலிஸார் ஸ்தலத்துக்குச் சென்று மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.



## நடமாடியோருக்கு திடீர் அன்டிஜன்

நேற்று (22) முதல், இந்த நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணப் பிரதேச செயலாளர், யாழ்ப்பாணம் மாநகர சபையின் பொது சுகாதாரப் பிரிவினர், பொலிஸ், இராணுவம் ஆகியோர் இணைந்து, நகரப்பகுதியில் பயணிப்போரை வழிமறித்து, அவர்களுக்கு இந்தத் திடீர் அன்டிஜன் பரிசோதனையை முன்னெடுக்கின்றனர்.

# வகையை தேடி காத்திருக்க வேண்டாம்

இந்நிலையில், இதுவரையிலும் தடுப்பூசியை ஏற்றிக்கொள்ளாத 60 வயதுக்கு மேற்பட்டோர், தாம் வசிக்கும் பிரதேசத்துக்கு அருகில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் தடுப்பூசி மத்திய நிலையத்துக்குச் சென்று தடுப்பூசியை பெற்றுக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில், நேற்றையதினம் அறிவிப்பொன்றை விடுத்திருந்த சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்தன, மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

தங்களுக்கு விருப்பமான தடுப்பூசிக்காக காத்திருக்காமல், கிடைக்கபெறும் ஏதேனும் ஒரு கொவிட் தடுப்பூசியை விரைந்து செலுத்திக்கொள்ளுமாறும் அறிவுறுத்தியுள்ளார்.

தற்போது கொவிட் தொற்றால் மரணிப்பவர்களில் 70 முதல் 80 சதவீதமானோர் எந்தவொரு கொவிட் தடுப்பூசியையும் பெற்றுக்கொள்ளாதவர்கள் என்றும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், தற்போது தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளன. ஆகையால், தனிமைப்படுத்தல் விதிகளை உரிய முறையில் மக்கள் பின்பற்ற வேண்டும் என்றும் அவ்வறிக்கையின் ஊடாக அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

"ஒவ்வொரு நாளும் இந்தத் தொற்றுநோய் அதிகரித்து வரும் உலகில் நாம் வாழ்கிறோம். அத்துடன், அதிகமான மக்கள் உயிரிழக்கின்றனர். எனவே, இயல்பு நிலைக்கு திரும்புவதற்கான மிக விரைவான வழி விரைவாக தடுப்பூசி போடுவதாகும் என்று அவர் குறிப்பிட்டார்.

மக்கள் மற்றொரு தடுப்பூசிக்காக காத்திருந்தால், தடுப்பூசி எடுப்பதில் ஏற்படும் தாமதம் அவர்களின் தலைவிதியை தீர்மானிக்கும் என தெரிவித்தார்.

கொரோனா மரணங்களை ஆராயும் போது, 60 வயதுக்கு மேற்பட்ட தடுப்பூசி பெற்றுக் கொள்ளாதவர்களுக்கே 70 முதல் 80 சதவீத மரணங்கள் சம்பவித்துள்ளன என்று சுட்டிக்காட்டினார்.

எனவே, குறிப்பாக 60 வயதுக்கு மேற்பட்டவர்கள், வைரஸிலிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்வதற்காக அருகிலுள்ள மையத்திலிருந்து முதலில் கிடைக்கக்கூடிய தடுப்பூசியை பெற்றுக்கொள்ளுமாறு அவர் வலியுறுத்தினார்.

## இன்றிலிருந்து ரூ.2,000 நிவாரண தொகை

மாவட்டச் செயலகங்களின் ஊடாக, இந்தக் கொடுப்பனவை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

> பிரதேச செயலாளர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு, 2,000 ரூபாய் நிவாரணத்தை விரைவாக வழங்க நடவடிக்கை

மாவட்ட ரீதியில் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டவர்களின் விவரங்களை விரைவாகத் தயாரிக்குமாறு, நிதியமைச்சின் செயலாளர், மாவட்டச் செயலாளர்களுக்கு ஏற்கெனவே ஆலோசனை வழங்கியிருந்தார்.

இதேவேளை, இந்த 2,000 ரூபாய்க்கான நிதி ஒதுக்கீடு தமக்குக் கிடைக்கப்பெற்றுள்ளதாக யாழ். மாவட்டச் செயலாளர் க.மகேசன் தெரிவித்தார்.

இது தொடர்பாக பிரதேச செயலாளர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு, இந்த நிவாரணத் தொகையை விரைவாக வழங்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## பிக்குவின் வாகனத்திலிருந்து 25 மதுபான போத்தல்கள் மீட்பு

குறித்த 2 வாகனங்களிலும் இந்த மாதம் 20ஆம் திகதி, மதுபானங்கள் கொண்டு செல்லப்பட்ட போதே, அவை கைப்பற்றப்பட்டுள்ளதுடன், இதனுடன் தொடர்புடைய வர்த்தகரும் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இதன்போது குறித்த பிக்குவின் வாகனத்திலிருந்து 25 மதுபான போத்தல்களும் குறித்த வர்த்தகரின் வாகனத்திலிருந்து 120 மதுபான போத்தல்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

பத்து நாள்களுக்கு நாடு முடக்கப்பட்டுள்ள நிலையில், முடக்க காலத்தில் அதிக விலைக்கு விற்பதற்காகவே, இவ்வாறு மதுபானங்கள் கொண்டு செல்லப்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், கைதுசெய்யப்பட்ட வர்த்தகருக்கு சொந்தமாக மதுபான விற்பனை நிலையம் ஒன்று இருக்கின்றமையும் தெரியவந்துள்ளது.

# மூன்றாவது டோஸ்

இது தொடர்பில் தேவையான நடவடிக்கையை எடுக்குமாறு ஜனாதிபதியும் ஆலோசனை வழங்கியுள்ளார் என்றும் அவர் தெரிவித்தார் .

இந்நிலையில், சகல சுகாதாரப் பணியாளர்களுக்கும் முதலில், மூன்றாவது தடுப்பூசி வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என சுகாதாரப் பிரிவு அறிவித்துள்ளது.

## காஸ் தட்டுப்பாட்டுக்கு இன்றுடன் முற்றுப்புள்ளி

இது தொடர்பில், அவ்வமைச்சு நேற்று (22) அனுப்பிவைத்திருந்த ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

லாப் நிறுவனம், தன்னுடைய உற்பத்தியை நிறுத்தியமையால், உள்ளூர் சந்தைகளில் கடந்தவாரம் காஸுக்கு கடுமையான தட்டுப்பாடு நிலவியது. லிற்றோ நிறுவனம் பழைய விலைக்கே காஸ் விநியோகத்தை தொடர்ந்தும் முன்னெடுத்தது. இந்நிலையில், லாப் நிறுவனம் புதிய விலைக்கு காஸ் விநியோகத்தை கடந்த 20ஆம் திகதி முதல் ஆரம்பித்துள்ளது.

இந்நிலையில், அவ்விரு நிறுவனங்களுக்கும் கடந்த 21ஆம் திகதியன்று இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண, கண்காணிப்பு விஜயங்களை மேற்கொண்டிருந்தார்.

அங்கிருந்து ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்திருந்த இராஜாங்க அமைச்சர், "உள்ளூர் சந்தையில் நிலவிய காஸ் தட்டுப்பாட்டுக்கு, இன்று (23) தீர்வு காணப்படும். எதிர்காலத்தில் எவ்விதமான தட்டுப்பாடுகளும் இன்றி காஸ் விநியோகிக்கப்படும்" என்றார்.

## கொரோனா நாடகமாடி கணவனை கொன்ற மனைவிக்கு விளக்கமறியல்

எனினும், அந்த இளம் தாய், தனது கணவன் கொரோனா தொற்றால் உயிரிழந்துவிட்டார் என நாடகம் ஆடியுள்ளார். இந்தச் சம்பவம், இரத்தினபுரி, கிரிவெல்தலாவ பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வழமைபோலவே ஆடைத்தொழிற்சாலைக்கு கடந்த 20ஆம் திகதியன்று வருகைதந்திருந்த அப்பெண், வேலை செய்துகொண்டிருந்த போதே, மனிதவள முகாமைத்துவ திணைக்களத்துக்கு அழைப்பொன்றுவந்துள்ளது.

அது தொடர்பில், அப்பெண்ணுக்கு அறிவித்த திணைக்களம், வாகனமொன்றையும் ஏற்பாடு செய்து வீட்டுக்கு அனுப்பிவைத்துள்ளது.

வீட்டுக்கு வந்து பார்த்தபோது, அவரது கணவன் இறந்துகிடந்துள்ளார். எனினும், கத்திப்புலம்பி ஊராரை கூப்பிட்டுவிடாமல், தன்னுடைய கணவன் கொரோனாவால் மரணமடைந்துவிட்டார் என அக்கம் பக்கத்தினருக்கு கூறியுள்ளார். அதனால், சடலத்தைப் பார்ப்பதற்கு யாரும் வரவில்லை.

இது தொடர்பில் பொலிஸாருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது. சடலத்தை, பொலிஸார் இரத்தினபுரி வைத்தியசாலையில் ஒப்படைத்தனர். அங்கு மேற்கொள்ளப்பட்ட பரி சோதனையில் கொரோனா தொற்றால் அவர் மரணிக்கவில்லை என்றும் செயற்கையான மூச்சுத்திணறல் காரணமாக மரணம் சம்பவித்துள்ளது என்றும் கண்டறியப்பட்டது.

அதனையடுத்து, சந்தேகமடைந்த பொலிஸார், மனைவியிடம் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

முதல்நாள் இரவு அதாவது 19ஆம் திகதியன்று படுக்கைக்குச் செல்வதற்கு முன்னர், தன்னுடைய கணவனுக்கு ஒரு கிளாஸ் பால் கொடுத்த மனைவி, பாலுடன் ஆறு தூக்கமாத்திரைகளையும் கலந்துள்ளார். அதனைக் குடித்த சிறிது நேரத்திலேயே கணவர் நன்றாக கண்ணயர்ந்துவிட்டார்.

உடனடியாக தன்னுடைய காதலனுக்கு தொலைபேசி அழைப்பை எடுத்த அந்தப் பெண், வீட்டுக்கு வருமாறு அழைத்துள்ளார். மோட்டார் சைக்கிளில் வந்தவுடன், கணவன் படுத்திருந்த அறைக்குச் சென்ற இவ்விருவரும், அந்நபரை மூச்சுத் திணறச் செய்து படுகொலை செய்துள்ளனர்.

கணவனின் கால்களை இறுக்கமாக காதலன் பிடித்துக்கொள்ள, மனைவி, தனது கணவனின் முகத்தில் தலையணையை வைத்து அமிழ்த்திப்பிடித்து மூச்சு திணறச்செய்துள்ளார். அவர் மரணமடைந்துவிட்டார் என தெரிந்துகொண்டதன் பின்னர், காதலன் வந்த வழியிலேயே அங்கிருந்து தப்பியோடிவிட்டார்.

அவர், அந்தப் பெண் பணியாற்றும் ஆடைத்தொழிற்சாலையில், மேற்பார்வையாளராகப் பணியாற்றுகின்றார். தன்னுடைய கணவன் தொடர்ச்சியாக பாலியல் ரீதியில் கடுமையாக துன்புறுத்துவதாக, அந்த மேற்பார்வையாளரின் கவனத்துக்கு அப்பெண் கொண்டுவந்துள்ளார். அதுவே காதலாக மலர்ந்துள்ளது.

எனினும், அந்தக் காதலுக்கு காதலியின் வீட்டார் கடுமையான எதிர்ப்புகளைத் தெரிவித்துவந்துள்ளனர் என்பது விசாரணைகளிலிருந்து கண்டறியப்பட்டுள்ளது. அப்பெண்ணும் மேற்பார்வையாளரும் சேர்ந்து, இரத்தினபுரியில் உள்ள மருந்தகங்களில் ஒவ்வொரு தூக்கமாத்திரையாக ஆறு மாத்திரைகளைக் கொள்வனவு செய்துள்ளனர் என்பதும் விசாரணைகளின் ஊடாகக் கண்டறியப்பட்டுள்ளது.

சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட இருவரையும், இரத்தினபுரி நீதவான் நீதிபதி ஜனிதா ரொசானி முன்னிலையில், நேற்று முன்தினம் (21) பொலிஸார் ஆஜர்படுத்தினர். இதன்போதே, இந்த மாதம் 30ஆம் திகதி வரை, இருவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு, நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

## 4ஆவது அலை உச்சத்தில் இருக்கும் நிலையில் பாகிஸ்தான் உதவியது

பாகிஸ்தானில் தயாரிக்கப்படும் 75 வெண்டிலேட்டர்கள் மற்றும் 150 சி-பெப் (CPAP) சுவாச உதவி இயந்திரங்களை இலங்கையில் கொவிட் -19 தொற்றுநோய் பரவலைக் கட்டுப்படுத்த பாகிஸ்தான் அரசாங்கத்தின் சார்பாக வழங்கி வைத்தனர்.

இது கொவிட் -19க்கு எதிரான போராட்டத்தில் இலங்கை மக்களுக்கான, பாகிஸ்தானிய மக்களின் ஆதரவின் வெளிப்பாடாகும் என பாகிஸ்தான் உயர்ஸ்தானராலயம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்ள்ளது.

இந்நிகழ்வில், அமைதி மற்றும் நிலையான அபிவிருத்துக்கான பிராந்திய ஒத்துழைப்பு பற்றிய பாகிஸ்தான் அரசாங்கத்தின் பார்வையை உயர் ஸ்தானிகர் தெளிவுபடுத்தியதோடு, பிராந்திய நாடுகளுடன் குறிப்பாக நட்பு நாடான இலங்கையுடன் கொவிட் -19 தொற்றுநோயை எதிர்த்துப் போராடுவதற்கான அனைத்து உதவிகளையும் பாகிஸ்தான் வழங்கும் என்றும் உறுதி அளித்தார்.

சார்க் அமைப்பின் கீழ் பிராந்திய ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான பாகிஸ்தானின் தீர்மானத்திற்கு இது ஒரு சிறந்த சான்றாகும். கொவிட் -19 தொற்றுநோய்க்கு எதிரான பொதுவான போராட்டத்தில் பிராந்திய அளவிலான முயற்சிகளை மேம்படுத்துவதற்காக பாகிஸ்தானின் 'சார்க் கொவிட் -19 அவசர உதவியின்' ஒரு பகுதியாக இம்மருத்துவ உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டது.

கொவிட் -19 தொற்றுநோயை எதிர்த்துப் போராட, இலங்கை மருந்து கூட்டுத்தாபனத்திற்கு (SPC) 8 மில்லியன் ரூபாய் (இலங்கை ரூபாயில்) பெறுமதியான காசோலையை இலங்கை ஜனாதிபதியிடம் 2021 ஜூன் 19 அன்று கங்காராமய விஹாரையில் வைத்து வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

கொவிட் -19 இன் 4ஆவது அலை நாட்டில் உச்சத்தில் இருக்கும் இந்நேரத்தில், இந்த உதவிக்காக பாகிஸ்தான் அரசுக்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நன்றி தெரிவித்தார்.

## கிளிநொச்சி விபத்தில் ஒருவர் பலி

கிளிநொச்சி 155ஆம் கட்டைப் பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தை அடுத்து, வானின் சாரதி கிளிநொச்சி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

தென்னிலங்கையில் இருந்து யாழ். நோக்கிப் பயணித்த டொல்பின் ரக வான்னொன்றும் எதிர்த்திசையில் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்றும் நேருக்கு நேர் மோதியதிலேயே இவ்விபத்து சம்பவித்துள்ளது.

இந்த விபத்துக்கு, வானின் சாரதியின் தூக்கக் கலக்கமாக இருக்கலாமென சந்தேகிக்கும் கிளிநொச்சி பொலிஸார், மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துவருவதாக தெரிவித்தனர்.

K Newspapers Viber Community

தொற்றுக்கு உள்ளாவோரைக் கட்டுப்படுத்தினால்

# இறப்பு வீதம் குறையும்

## வீட்டுக்குள்ளேயே அனைவரும் இருக்க வேண்டும்

கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழப்போரின் எண்ணிக்கையை குறைக்க, கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாவோரின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்த வேண்டும் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன தெரிவித்துள்ளார்.



இதுதொடர்பில் மேலும் தெரிவித்த அவர், கொரோனா வைரஸ் பரவும் வழிமுறைகளைக் கண்டறிந்து, அவற்றைத் தடுக்க வேண்டும். இதற்காகவே நாடு முடக்கப்படுகிறது எனவும் தெரிவித்த சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன, நாடு முடக்கப்பட்டுள்ளதால், ஒருவரிடமிருந்து மற்றொருவருக்குக் கொரோனா வைரஸ் பரவுமாக இருந்தால் அது வீட்டுக்குள்ளே இருப்பவர்களுக்கு மாத்திரமே பரவும் என்றார்.

இதனூடாக கொரோனா வைரஸ் வேறொரு நபருக்குப் பரவுவது கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகவும், எவ்வாறாயினும் இதன் பிரதிபலன்களை தெரிந்துகொள்ள, சில நாள்கள் செல்லும் எனவும் தெரிவித்தார்.

நாடு முடக்கப்பட்டுள்ளதால், வீட்டுக்குள்ளேயே அனைவரும் இருக்க வேண்டும். ஏனையோரையும் வீட்டுக்கு அழைத்து வந்து கூடியிருக்க வேண்டாம். அவ்வாறு செய்வதால் நாடு முடக்கப்பட்டமை அர்த்தமற்றதாகிவிடும் எனவும் தெரிவித்தார்.

கொழும்பில்

# 'இரண்டரை இலட்சம் மக்களுக்கு 2 ஆயிரம் ரூபாய்'

கொழும்பு மாவட்டத்தில் வாழ்வாதாரத்தை இழந்த இரண்டரை இலட்சத்துக்கும் அதிகமானோருக்கு 2 ஆயிரம் ரூபாய் நிவாரணம் அடுத்த வாரம் வழங்கப்படுமென மாவட்ட செயலாளர் பிரதீப் யசரத்ன தெரிவித்துள்ளார்.



கொழும்பு மாவட்டத்தில் வாழ்வதாரத்தை இழந்துள்ள இரண்டரை இலட்சத்துக்கும் அதிகமானோருக்கு 2 ஆயிரம் ரூபாய் நிவாரணத் தொகையை வழங்குவதற்காக திறைசேரியால் தனக்கு 467 மில்லியன் ரூபாய் நிதி வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

கொழும்பு மாவட்டத்தில் வாழ்வாதாரத்தை இழந்துள்ளோர் முதற்கட்டமாக இனங்காணப்பட்டுள்ளதாகவும், இவர்கள் அடுத்த வாரம் நிவாரண தொகை வழங்கப்படும் எனவும் தெரிவித்தார்.

# ஒரு மாத வேதனம் வேண்டும்

பாராளுமன்ற,பிரதேச சபை உறுப்பினர்கள் அனைவரும், தங்களது ஒரு மாதச் சம்பளத்தை அரசாங்கத்துக்கு வழங்க வேண்டுமென முறுத்தெட்டுவே ஆனந்த தேரர் கோரிக்கை விடுத்துள்ளார்.



கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய அவர், நாட்டைக் கட்டியெழுப்புவதற்காக சபைக்குச் சென்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் முன்னுதாரணமாகச் செயற்பட வேண்டும். தொழிலாளர்களின் சம்பளத்தில் கைவைக்கக் கூடாது எனவும் அவர் கோரிநின்றார்.

முடிந்தால் சம்பளத்தை வழங்குங்கள் என்று தொழிலாளர்களுக்கு கோரிக்கை ஒன்றை முன்வைக்க முடியும். மாறாக பலவந்தமாக தொழிலாளர்களின் சம்பளத்தைப் பெற முடியாது எனவும் தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தங்களது ஒரு மாதச் சம்பளத்தை அரசாங்கத்துக்கு வழங்க வேண்டும். அவ்வாறு வழங்கி முன்னுதாரணமாகச் செயற்பட்டால், ஏனையோரும் தங்களது சம்பளத்தை வழங்குவார்கள் எனவும் தெரிவித்தார்.


எமக்கு மக்கள் மத்தியில் சென்று நிதியை திரட்ட முடியும். எனினும் அதனை செய்வதற்கு இதுபொருத்தமான காலமல்ல எனவும், எனவே பிரதேச சபை உறுப்பினர்கள் உள்ளிட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தங்களது ஒரு மாதச் சம்பளத்தை நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு வழங்க வேண்டும் எனவும் தெரிவித்தார். அபிவிருத்தித் திட்டங்களை சிறிது காலத்துக்கு நிறுத்தி வைத்துவிட்டு, நாட்டிலிருந்து கொரோனா வைரஸை ஒழிப்பதற்கு முயற்சிக்க வேண்டுமென நாம் முன்பே கூறியிருந்தோம். நாம் கூறும் எதனையும் கேட்பதில்லை. ஜனாதிபதி அருகில் அவரை தறவாக வழிநடத்தக்கூடிய ஆலோசகர்களே இருக்கிறார்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

கிளிநொச்சியில்

# விதை நெல் நெருக்கடி

■ நடராஜா கிருஸ்ணகுமார்

கிளிநொச்சி மாவட்டத்தில், விதை நெல்லுக்கான நெருக்கடி காணப்படுகின்றதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.



சிறுபோக நெற்செய்கை கூடுதலாக விதை நெல் உற்பத்தியை இலக்காக கொண்டதாக இருந்தாலும், நெல்லை அறுவடை செய்தவுடன், பச்சை நெல்லாக விவசாயிகள் கூடுதலாக விற்பனை செய்து வருகின்றனர்.

இதன் காரணமாக, விதை நெல்லுக்கான நெருக்கடி காணப்படுவதாக, விவசாயிகளால் தெரிவிக்கப்படுகின்றது. சிறுபோக கூட்டங்களை நடத்துகின்ற அதிகாரிகள், விதை நெல் உற்பத்தி தொடர்பாக விவசாயிகளுக்கு அறிவுறுத்தல்களை வழங்க வேண்டும்.

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த 10 ஆண்டுகளாக நெல் உலர விடும் தளங்கள் அமைக்கப்படவில்லை, களஞ்சிய வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை என்றனர்.

அத்தியாவசிய சேவையில் உள்ளோர்

# உறுதிப்படுத்துவது கட்டாயம்



தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ள இக்காலப் பகுதியில் அத்தியாவசிய நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் அதனை உறுதிப்படுத்த வேண்டுமென தேசிய செயற்பாட்டு மையத்தின் பிரதானியும் இராணுவ தளபதியுமான ஜெனரல் ஷவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி துஷ்பிரயோகம் செய்வது சட்ட விரோதமாகுமென கொரோனா தொற்றைக் கட்டுப்படுத்தும் தேசிய செயற்பாட்டு மையத்தின் பிரதானியும் இராணுவ தளபதியுமான ஜெனரல் ஷவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர், நாட்டின் தற்போதைய நிலைமை தொடர்பில் ஜனாதிபதியிடம் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை கருத்திற்கொண்டு தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டதாகவும். இது வைரசை கட்டுப்படுத்துவதற்காக சுகாதார ஆலோசனைப்படி விஞ்ஞான ரீதியாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையாகும் என்றும் இராணுவ தளபதி ஜெனரல் ஷவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

ஆடைத் தொழில்கள், விவசாய நடவடிக்கைகள் மற்றும் மருந்தகங்களின் செயற்பாடுகள் அனுமதிக்கப்படும். தொழிலுக்குச் செல்பவர்கள் விஷேட அனுமதி பெறத் தேவையில்லை. வீதித்தடைகளில் உள்ள பொலிஸார் இராணுவத்தினரிடம் உங்களது அடையாள அட்டையைக் காட்டி, அனுமதி பெற முடியும். தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ள காலப்பகுதியில் 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பு ஊசி ஏற்றுவது குறித்து விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

தடுப்பூசி ஏற்றும் வேலைத்திட்டத்தின் கீழ் நேற்று முன்தினம் இரண்டு இலட்சத்து 20 ஆயிரத்துக்கும் மேற்பட்டோருக்கு தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது. இதன்போது சினோபார்ம் தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் 73 ஆயிரம் பேருக்கு வழங்கப்பட்டுள்ளது. சினோபார்ம் தடுப்பூசியின் முதலாவது டோசை நேற்று 13 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பெற்றுள்ளனர் என்றும் கொரோனா தொற்றை கட்டுப்படுத்தும் தேசிய செயற்பாட்டு மையத்தின் பிரதானியும் இராணுவ தளபதியுமான ஜெனரல் ஷவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இதேவேளை, மேல் மாகாணத்துக்குள் பிரவேசிக்கும் மற்றும் வெளியேறும் 13 இடங்களில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள வீதித் தடையில் நேற்றைய தினம் 639 வாகனங்களும் மற்றும் 1,128 நபர்களும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஊரடங்குச் சட்டக் காலத்தில்;

# அனுமதிப் பத்திரங்களை பொலிஸார் வழங்குவார்களா?



நாட்டில் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுலில் உள்ள நிலையில், பொலிஸாரால் போக்குவரத்து அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்படாதென சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியும் பொலிஸ் ஊடகப்பேச்சாளருமான நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

நாட்டில் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுலில் உள்ள நிலையில், பொலிஸாரால் போக்குவரத்து அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படுமா என பொதுமக்கள் தொடர்ந்து பொலிஸாரிடம் கேட்டு வருகிறார்கள் என்றார்.

இதேவேளை, தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுலில் உள்ள நிலையில் பொலிஸாரால் எந்தவிதமான அனுமதிப்பத்திரங்களும் வழங்கப்படாதெனவும் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியும் பொலிஸ் ஊடகப்பேச்சாளருமான நிஹால் தல்துவ தெரிவித்தார்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய, அத்தியாவசிய சேவையில் ஈடுபடுபவர்கள், தொழிலுக்காகச் செல்பவர்கள், நிறுவன தலைவர்களிடம் கடிதமொன்றை பெற்றுக்கொண்டு, பயணிக்க முடியும் எனவும் தெரிவித்தார்.

விசேட காரணங்களுக்காக மேற்கொள்ளப்படும் பயணங்களின்போது, பயணத்துக்கான சரியான காரணத்தை பொலிஸாரிடம் கூறிவிட்டுப் பயணிக்க முடியும் எனவும் தெரிவித்தார்.

அத்தியாவசிய தேவைக்கான

# பொறிமுறை பலப்படுத்தப்படும்



தனிமைப்படுத்தல் ஊரடங்கு காலப்பகுதிக்குள் அத்தியாவசிய சேவையை முன்னெடுத்துச் செல்வதற்கான பொறிமுறையைப் பலப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவித்துள்ள கிராமிய வீதி மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர் நிமல் லன்சா, குறித்த காலப்பகுதிக்குள் மக்கள் அசௌகரியத்துக்கு உள்ளாகாத வகையில் இத்திட்டத்தை மாவட்டம் மற்றும் பிரதேச மட்டங்களில் முன்னெடுக்கவுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் நிமல் லன்சா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆலோசனைக்கமைய, அரசாங்க பணியாளர்களுடன் இணைந்து இதற்கு தேவையான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாகவும் இராஜாங்க அமைச்சர் நிமல் லன்சா தெரிவித்துள்ளார்.

கொரோனா கட்டுப்படுத்தலுக்குத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் தொடர்ச்சியாக முன்னெடுத்து வருவதுடன், இதற்காக சுகாதார வழிகாட்டல்களையும் தனிமைப்படுத்தல் சட்டதிட்டங்களையும் பின்பற்றி மக்கள் ஒத்துழைப்பு வழங்குவார்கள் என தான் நம்புவதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்த கொரோனா தொற்று எவ்வளவு காலத்துக்கு இருக்குமென சரியாக கூறமுடியாது என தெரிவித்துள்ள அவர், இதற்கான ஒரே தீர்வு விரைவாக தடுப்பூசி ஏற்றலும் சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றலுமே ஆகுமென சுகாதார நிபுணர்கள் தெரிவித்துள்ளனர் என்றார்.

# பி.சி.ஆர் முடிவு வரும் வரை வீட்டில் இருக்க கோரிக்கை

## அச்சமின்றி வைத்தியசாலை வாருங்கள்

காய்ச்சல் உட்பட ஏனைய நோய்கள் காரணங்களால் பி.சி.ஆர் பரிசோதனைகளை மேற்கொள்வோர் இறுதிப் பெறுபேறு கிடைக்கும் வரை வீடுகளில் தங்கியிருக்க வேண்டும் என்று சுகாதாரத் துறையினர் வலியுறுத்தியுள்ளனர்.

தற்போது அதிக எண்ணிக்கையிலானோர் பி.சி.ஆர் பரிசோதனைகளை மேற்கொள்கிறார்கள். இவ்வாறு நோய் தொற்றுக்கு உள்ளாகி, இறுதி அறிக்கை கிடைக்க முன்னர் தொழிலுக்குச் செல்பவர்களால் பாரிய பாதிப்பு ஏற்படலாம் என்றும் சுகாதாரத் துறையினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

கொழும்பு மாநகர சபைக்குட்பட்ட பல விடங்களிலும் தற்போது எழுமாற்று முறையில் பி.சி. ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இதேவேளை, வீடுகளில் உள்ள வெவ்வேறு நோய்த் தாக்கங்களால் பாதிக்கப்பட்டுள்ள நபர்கள், ஏதாவது அசௌகரியம் ஏற்பட்டால், வைத்தியசாலை செல்ல நடவடிக்கை எடுக்க வேண்டும் என கொழும்பு தேசிய வைத்தியசாலையின் விசேட வைத்திய நிபுணர் ஹர்ச சதிஸ்சந்திர தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் அச்சம் காரணமாக சிலர் வைத்தியசாலைக்கு வருதை தவிர்த்து வருவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

எவ்வாறாயினும், இருதய நோய் போன்ற நோய் நிலைமைகளின் போது வைத்தியசாலைக்கு வருவதை தவிர்த்தால், அது பாரிய விளைவுகளுக்கு முகங்கொடுக்க நேரிடும் என விசேட வைத்திய நிபுணர் தெரிவித்தார்.

வைத்தியசாலைகளில் கொவிட் சிகிச்சை பிரிவு தனியாக இயங்குவதால், அது குறித்த தேவையற்ற அச்சத்தை ஏற்படுத்திக் கொள்ள தேவையில்லை என அவர் மேலும் தெரிவித்தார்.

# நிவாரணத் தொகை குறைப்பு வெட்கக்கேடான செயற்பாடு



அர்ப்பணிப்பு செய்ய வேண்டியவர்கள் நாட்டு மக்களல்ல; அரசாங்கமே எனத் தெரிவிக்கும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷண ராஜகருணா, நிவாரணத் தொகையை 5 ஆயிரத்திலிருந்து 2 ஆயிரம் ரூபாயாக அரசாங்கம் குறைத்திருப்பது, வெட்கத்துக்குரிய செயற்பாடு எனவும் தெரிவித்தார்.

இதுதொடர்பில் மேலும் தெரிவித்த அவர், நாட்டு மக்களுக்கு விசேட உரையாற்றிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, நாட்டு மக்கள் அர்ப்பணிப்பு செய்ய தயாராக இருக்க வேண்டுமென தெரிவித்துள்ளார். நாட்டு மக்கள் இதுவரையில் நாட்டுக்காகப் பாரிய அர்ப்பணிப்புக்களை செய்துள்ளனர் என்றார்.

அரசாங்கமும் பாரிய அர்ப்பணிப்புக்களை செய்துள்ளபோதிலும், அரசாங்கம் சரியான நேரத்தில் சரியான தீர்மானங்களை எடுக்கவில்லை எனவும் குற்றஞ்சுமத்திய பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷண ராஜகருணா அரசாங்க ஊழியர்கள் வாழ்க்கையைக் கொண்டு செல்ல முடியாத நிலையில் இருக்கிறார்கள். அவர்களுக்கு சிறிய தொகை ஒன்றே சம்பளமாக வழங்கப்படுகிறது எனவும் தெரிவித்தார்.

தற்போது செய்ய வேண்டியது அரச ஊழியர்களின் சம்பளத்தை குறைப்பதல்ல. அரசாங்கம் என்றவகையில் அரசாங்கமே அர்ப்பணிப்புக்களை செய்ய வேண்டும். இந்த நேரத்தில் மேம்பாலங்கள், கோடிக்கணக்கில் நிதியை செலவிட்டு அமைக்கப்படும் அதிவேக நெடுஞ்சாலைகள், ஜிம்கள் எல்லாம் தேவையா எனவும் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷண ராஜகருணா கேள்வியெழுப்பினார்.

நிவாரணமாக வழங்கப்பட்டு வந்த 5 ஆயிரம் ரூபாய் நிவாரணத்தை இரண்டாயிரமாகக் அரசாங்கம் குறைப்பதற்கு எடுத்துள்ள தீர்மானம் வெட்கத்துக்குரியது எனவும் தெரிவித்தார்.

# மரங்களை வேருடன் பிடுங்கிய 7பேர் கைது

■ ரஸீன் ரஸ்மின்


புத்தளம் தப்போவ சரணாலயத்துக்கு அருகில் 12ஆம் கட்டை பிரதேசத்திலுள்ள கால்வாய் ஓரமாக காணப்படும் ஒருசில இயற்கைத் தாவரங்களைச் சட்டவிரோதமாக அகற்றிய குற்றச்சாட்டின் கீழ் 7 பேரைச் சந்தேகத்தின் பேரில் நேற்றுமுன்தினம் (21) கைது செய்யப்பட்டுள்ளனர் என கறுவலகஸ்வெவ வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.



சட்டவிரோதமாக வேறோடு அகற்றப்பட்ட அரிதான மரங்களை நபர்கள் ஒருதொகை இயற்கை தாவரங்களும் அவர்களிடமிருந்து அரிதான மரங்களைச் சந்தேக நபர்கள் வேறோடு மீட்கப்பட்டுள்ளன.

கொழும்பு நகர் பகுதிகளில் செயற்படுத்தப்படும் விஷேட வேலைத் திட்டங்களுக்காக வழங்குவதற்கென குறித்த மரங்கள் வேறோடு பிடுங்கப்பட்டுள்ளமை மேற்கொள்ளப்பட்ட முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக கறுவலகஸ்வெவ வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

# கொரோனாத் தொற்றால் மாநகர உறுப்பினர் மரணம்



கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டு நீர்கொழும்பு மாநகர சபை உறுப்பினர் கெலிசன் ஜெயக்கொடி நேற்று(22) அதிகாலை தனது வீட்டில் மரணமானார்.

இவர் ஐக்கிய தேசிய கட்சியின் சார்பில் கெபுன்கொட, செத்தப்பாடுவ பிரதேசங்களில் மாநகர சபை உறுப்பினராக பல வருட காலம் பணியாற்றியவர் ஆவார்.

இவர், சிறிது காலம் நீர்கொழும்பு மாநகர சபையின் எதிர்க் கட்சித் தலைவராக செயற்பட்டார்.

LK Newspapers Viber Community

வைத்தியசாலையில் தரமற்ற உணவு:

# ஆராய குழு விரைகிறது

ம.தமிழ்ச்செல்வன்




கிளிநொச்சி - கிருஸ்ணபுரத்தில் அமைந்துள்ள வடக்கு மாகாண தொற்று நோயியல் வைத்தியசாலையில், நோயாளிகளுக்கு வழங்கப்படுகின்ற உணவின் தரம் குறித்து, வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளருடன் கலந்துரையாடி, மாகாணத்திலிருந்து குழு ஒன்றை அனுப்பிவைத்து ஆராயப்படவுள்ளதாக, வடக்கு மாகாண பிரதி பிரதம செயலாளர் (நிதி) எஸ். குகதாஸ் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி - கிருஸ்ணபுரத்தில் அமைந்துள்ள வடக்கு மாகாண தொற்று நோயியல் வைத்தியசாலையில், சாப்பிட முடியாதளவுக்கு மிக மோசமான உணவு வழங்கப்பட்டு வருவதாக கொரோனா தொற்றாளர்கள், வெள்ளிக்கிழமையன்று (20) எழுத்து மூலம் முறைப்பாடொன்றை, அந்த வைத்தியசாலை நிர்வாகத்திடம் கையளித்துள்ளனர்.

அத்துடன், உணவின் தரம் குறித்து வைத்தியசாலை நிர்வாகத்தின் பார்வைக்கு, கண்காணிப்பு ஒளிவாங்கி (சிசிடிவி) ஊடாக நேரலையாகவும் கொண்டு சென்றுள்ளனர்.

இதன்போது, நோயாளிகளுக்கு உள்ளக தொடர்பாடல் கருவிகள் ஊடாகப் பதிலளித்த மாவட்ட சுகாதார நிர்வாகம், தாங்கள் சமைத்து வழங்கிய போது தரமான உணவையேவழங்கியதாகவும், இருந்தபோதும் ஊடகங்களில் தரமற்ற உணவு வழங்கப்படுவதாக குற்றச்சாட்டுகள் எழுப்பட்டதாகவும் கூறியது.

இதனை அடுத்தே, தாம் தற்போது சமைத்த உணவு வழங்கும் நடவடிக்கையை ஒப்பந்தகாரர் ஒருவருக்கு பெறுகை நடைமுறை ஊடாக வழங்கியுள்ளதாகத் தெரிவித்த மாவட்ட சுகாதார நிர்வாகம், ஆகவே தற்போது ஒப்பந்தகாரரால் வழங்கப்படும் சமைத்த உணவின் தரம் தொடர்பாக தங்களால் எதுவும் செய்ய முடியாது என்றும் கூறியது.

இந்நிலையில், இது தொடர்பில் வடக்கு மாகாண பிரதி பிரதம செயலாளர் (நிதி) எஸ். குகதாஸிடம் தொடர்புகொண்டு வினவியபோது, அவர் மேற்படி விடயத்தை ஏற்றுக்கொண்டதுடன், வைத்தியசாலைக்கு ஒப்பந்தகாரர் விநியோகிக்கின்ற உணவின் தரம் குறித்து மாவட்ட, மாகாண சுகாதார அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

இது தொடர்பில் பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் நந்தகுமரனை தொடர்புகொண்டு வினவியபோது, இந்த விடயம் தொடர்பில், மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரிடமே வினவ வேண்டும் என பதிலளித்தார்.

அவர் தற்போது கோவிட்-19 தொற்றுக்குள்ளாகி, தனிமைப்படுத்தலில் இருகின்றார் எனவும் அவரின் கவனத்துக்கு இவ்விடயத்தைக் கொண்டு செல்வதாகவும் உறுதியளித்தார்.

ஆடை தைக்கச் சென்ற

# சிறுமியை காணவில்லை

கனகராசா சரவணன்



மட்டக்களப்பு, காத்தான்குடிப் பொலிஸ் பிரிவிலுள்ள புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில், 16 வயதான சிறுமி ஒருவர், உறவினர் வீட்டுக்கு ஆடை தைப்பதாகச் சென்ற நிலையில் காணாமல் போயுள்ளார், என அச்சிறுமியின் பாட்டி, கடந்த 19ஆம் திகதி முறைப்பாடு செய்துள்ளார் என காத்தான்குடிப் பொலிஸார் தெரிவித்தனர்.

புதுக்குடியிருப்பு, புளியடி வீதியைச் சேர்ந்த தவராசா சசிக்கா என்ற சிறுமியே, இவ்வாறு காணாமல் போயுள்ளார்.

தந்தையின்றி தாயாரும் வேறு திருமணம் முடித்துச் சென்றுள்ள நிலையில், பாட்டியின் பராமரிப்பில் தனது மூத்த சகோதரியுடன் வாழ்ந்து வந்த இச்சிறுமி, சம்பவதினமான 18ஆம் திகதி பிற்பகல் 1.30 மணியளவில் உறவினரின் வீட்டுக்கு ஆடை தைப்பதற்குச் செல்வதாகக் கூறிவிட்டு, வீட்டை விட்டு வெளியேறியுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், இரவாகியும் சிறுமி வீடு திரும்பாததையடுத்து அவரைத் தேடியபோதும் கண்டுபிடிக்கமுடியவில்லை எனவும், சிறுமி காணாமல் போயுள்ளதாகவும், பொலிஸ் நிலையத்தில் அச்சிறுமியின் பாட்டி முறைப்பாடு செய்துள்ளார்.

இது குறித்த மேலதிக விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



## கிழக்கில் வீதிகள் வெறிச்சோடின

கொரோனாத் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்கில் நாடு முழுவதும் எதிர்வரும் 30ஆம் திகதிஅதிகாலை 4 மணி வரை தனிமைப்படுத்தல் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ளது. இந்நிலையில், கிழக்கு மாகாணத்திலுள்ள அம்பாறை மற்று மட்டக்களப்பு மாவட்டங்களின் பிரதான வீதிகள் சன நடமாட்டம் இன்றி, வெறிச்சோடிக் கிடப்பதைப் படங்களில் காணலாம்.

(படம்: வி.ரி.சகாதேவராஜா)

## யானை தாக்கி ஒருவர் மரணம்



கனகராசா சரவணன்

மட்டக்களப்பு, கரடியனாறு பிரதேசத்தில், யானையின் தாக்குதலுக்கு இலக்காகி, கரடியனாறு, கூமாச்சோலை சந்தி எனும் இடத்தைச் சேர்ந்த 42 வயதுடைய கோணேசப்பிள்ளை சிறிராம் ஜீவா என்பவர் மரணித்துள்ளார்.

20ஆம் திகதி இரவு, அப்பகுதிக்குள் வந்த காட்டு யானைகள் அங்கிருந்த தென்னை மரங்களைச் சேதப்படுத்தியுள்ளன.

இதன்போது, அங்கிருந்த இந்நபரும் யானையொன்றின் தாக்குதலுக்கு இலக்காகி, சம்பவ இடத்திலேயே மரணித்துள்ளார் என கரடியனாறு பொலிஸார் தெரிவித்தனர்.

சடலம் பிரேதப் பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கரடியனாறு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



## மீளத் திறக்கப்படும் வைத்தியசாலை

நூருல் ஹுதா உமர்

அக்கரைப்பற்று பனங்காடு பிரதேச வைத்தியசாலையில் பணிபுரியும் வைத்தியர் ஒருவருக்கும் அலிக்கம்ப பிரதேசத்தில் இருந்து சிகிச்சைக்காக வந்த சிலருக்கும் ஏற்பட்ட முரண்பாட்டில், வைத்தியர் ஒருவர் தாக்கப்பட்ட சம்பவம் அண்மையில் இடம்பெற்றுள்ளது.

இதனையடுத்து குறித்த வைத்திய சாலையில் பணியாற்றும்

வைத்தியர்கள், தாதியர்கள் மற்றும் ஊழியர்கள் பாதுகாப்புக் கருதி பணிக்கு வர மறுத்ததால் சில நாள்களாக இவ் வைத்தியசாலை பூட்டப்பட்டிருந்தது.

இந்நிலையில் இது தொடர்பில் நடவடிக்கை எடுக்கும் நோக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் மற்றும் கல்முனை மாநகர சபை உறுப்பினர் சந்திரசேகரம் ராஜன் ஆகியோர் கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் கு.சுகுணனை கல்முனை சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இச்சந்திப்பையடுத்து, இன்று குறித்த வைத்தியசாலையைத் திறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மாநகர சபை உறுப்பினர் சந்திரசேகரம் ராஜன் தெரிவித்தார்.






## வீடு வீடாக தடுப்பூசி

எம்.எஸ்.எம்.நூர்தீன்

காத்தான்குடியில் வாழும் 60 வயதுக்கு மேற்பட்ட, வீட்டை விட்டு வெளியில் வரமுடியாத நிலையில் உள்ளோருக்கு அவர்களது வீடுகளுக்குச் சென்று கொரோனாத் தடுப்பூசியைச் செலுத்தும் நடவடிக்கை, நேற்றைய தினம் (22) ஆரம்பிக்கப்பட்டது.

காத்தான்குடி சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் ஏ.எல்.எம். நபீல் தலைமையில் நடைபெற்ற இச்செயற்பாட்டில், பொதுச் சுகாதாரக் பரிசோதகர்கள், தாதியர்கள், சுகாதார ஊழியர்கள் ஆகியோர் ஈடுபட்டனர்.

இச்செயற்பாட்டுக்கு காத்தான்குடி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துக்குச் சொந்தமான வாகனம் பயன்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

நேர்முகத் தேர்வு

## இன்று நடைபெறாது

சண்முகம் தவசீலன்



பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - கருநாவல்பற்று தெற்கு, விவாகப் பதிவாளர் பதவி - புதுக்குடியிருப்பு, ஆகியவற்றுக்கான நேர்முகத் தேர்வு, இன்று (23) இடம்பெறாது என, முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் அறிவித்துள்ளது.

நாட்டின் தற்போதைய கொரோனா நிலைவரம் மற்றும் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் என்பன காரணமாக, குறித்த நேர்முகத் தேர்வு இடம்பெறாது எனவும், அவர் தெரிவித்தார்.

இதற்கமைய, இந்த நேர்முகத் தேர்வுக்கான திகதி பின்னர் அறியத்தரப்படும் என, முல்லைத்தீவு மாவட்டச் செயலக மேலதிக செயலாளர் க.கனகேஸ்வரன் தெரிவித்தார்.

பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - கருநாவல்பற்று தெற்கு, விவாகப் பதிவாளர் பதவி - புதுக்குடியிருப்பு, ஆகியவற்றுக்கான நேர்முகத் தேர்வு, முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் இன்று இடம்பெறும் என முன்னதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

'சிவன் அருள்' இல்லத்தில்

## சிறார், ஊழியர்களுக்கு கொரோனா தொற்று

எஸ்.றொசேரியன் லெம்பேட்



மன்னார் திருக்கேதீஸ்வரம் சிவன் அருள் இல்லத்தைச் சேர்ந்த சிறுவர்கள் மற்றும் அங்குள்ள ஊழியர்களுக்கு என 26 பேருக்கு, கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக, மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன் தெரிவித்தார்

நேற்று (22) காலை, அவர் விடுத்துள்ள கொரோனா நிலவர அறிக்கையிலேயே, இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த அறிக்கையில், மன்னார் மாவட்டத்தில், நேற்று முன்தினம் மாலை மேலும், 46 கொரோனா தொற்றாளர் அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 'அரைக்குறையில் வற்றாப்பளை வீதி'

நடராசா கிருஸ்ணகுமார்



முல்லைத்தீவு - வற்றாப்பளை வீதிப் புனரமைப்புப் பணிகள், முழுமைபெறாது அரைகுறையாக நீண்ட காலமாகக் காணப்படுவதாக, கரைதுறைபற்று பிரதேச சபை உறுப்பினர் த.அமலன் தெரிவித்தார்.

இது தொடர்பில் தொடர்ந்துரைத்த அவர், வீதி அபிவிருத்தி அதிகார சபையால், கடந்த மூன்றாண்டுகளுக்கும் மேலாக, வற்றாப்பளை வீதிப் புனரமைப்புகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றார்.

முல்லைத்தீவு - மாங்குளம் வீதியில், 3ஆம் கட்டைச் சந்திப் பகுதியில் இருந்து வற்றாப்பளை நோக்கிச் செல்லும் 05 கிலோமீற்றர் வீதியே புனரமைக்கப்பட்டு வருவதாகவும், அவர் கூறினார்.

இப்பணிகள் மூன்றாண்டுகளுக்கும் மேலாக நிறைவு பெறாமல் அரைகுறையாகக் காணப்படுவதாகத் தெரிவித்த அவர், வற்றாப்பளை கிராம மக்கள் முல்லைத்தீவு நகரம், முல்லைத்தீவு பொது வைத்தியசாலைக்கு வருகை தருவதில் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர் எனவும் கூறினார்.

வீதிப் புனரமைப்புப் பணிகளை முன்னெடுத்துள்ள வீதி அபிவிருத்தி அதிகார சபையினர், வீதி புனரமைப்புப் பணிகளை விரைவாக முன்னெடுத்து, முடிவுறுத்த வேண்டும் என்பதே மக்களின் கோரிக்கையாகும் எனவும், அவர் தெரிவித்தார்.

## கணேசபாலேந்திரன் ஓய்வுபெற்றார்

கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலய அதிபராக பணியாற்றிய தாமோதரம்பிள்ளை கணேசபாலேந்திரன் (மந்துவில்) (SLPS I) . அரச கல்விச் சேவையில் இருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

மந்துவில் வடக்கு, கொடிகாமத்தில் 1961ஆம் ஆண்டு பிறந்த இவர், தனது ஆரம்பக்கல்வியை மந்துவில் சிறீபாரதி வித்தியாலயத்திலும் உயர்கல்வியை மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியிலும் பயின்றுள்ளார்.

கிளிநொச்சி மத்திய கல்லூரியில் 1989ஆம் ஆண்டு ஆரம்பமான இவரது கல்விச் சேவை, 2021ஆம் ஆண்டு, கைதடி முத்துக்குமாரசுவாமி பாடசாலையில் ஓய்வுபெறும் வரை சுமார் 11 பாடசாலைகளில் அதிபராகக் கடமையாற்றியுள்ளார்.



பிரதேச செயலாளர்கள்

## ஐவருக்கு இடமாற்றம்

நூருல் ஹுதா உமர்

ஐந்து பிரதேச செயலாளர்களுக்கு எதிர்வரும் 25 ஆம் திகதி முதல் அமுலாகும் வகையில் இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளன.

லகுகல பிரதேச செயலாளர் சந்தருபன் அனுருத்த அம்பாறை பிரதேச செயலாளராகவும், அம்பாறை பிரதேச செயலாளர் எம்.எஸ்.என் சொய்ஸா சிறிவர்தன அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஏ.எம் லத்தீப் நிந்தவூர் பிரதேச செயலாளராகவும், நிந்தவூர் பிரதேச செயலாளர் ரீ எம் எம் அன்ஷார், அக்கரைப்பற்று பிரதேச செயலாளராகவும், கரைப்பற்று பிரதேச செயலாளர் எம்.எஸ்.எம் றஸ்ஸான், இறக்காமம் பிரதேச செயலாளராகவும் இடமாற்றப்பட்டுள்ளனர்.

LK Newspapers Viber Community

நுவரெலியா மாவட்டத்தின் சில பகுதிகளுக்கு

# கொரோனா தடுப்பூசி வழங்கப்படவில்லை

## பொதுமக்கள் குற்றச்சாட்டு

■ கே.சுந்தரலிங்கம்

நுவரெலியா மாவட்டத்தின் ஐபொரஸ்ட், லொரிஸ்ட்டன், மத்துரட்ட, வெம்லி உள்ளிட்ட அதனை அண்டிய பல தோட்டங்களில் உள்ள மக்களுக்கு, இதுவரையும் எவ்வித கொரோனா தடுப்பூசிகளும் பெற்றுக்கொடுக்கவில்லை என, அப்பிரதேச மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.


இதனால் கொரோனா தொற்றுப் பரவல் காரணமாக சிலர் மரணித்துள்ளனர் எனவும் பல குடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ள நிலையில் தடுப்பூசிகள் தொடர்பாக உரியவர்களிடம் சென்று கேட்டப்போதிலும் அவர்கள் அங்குமிங்கும் அலையவிட்டு, குறித்த தோட்டங்களை புறக்கணித்து வருவதாகவும் பொதுமக்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

இது தொடர்பில், மக்கள் பிரதிநிதிகளை தொடர்புகொண்ட போதிலும் அவர்களும் எவ்வித நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த விடயம் தொடர்பில், சுகாதாரத் தரப்பினரிடம் வினவிய போது, "தற்போது நுவரெலியா மாவட்டத்தில் கொரோனா தொற்றுப் பரவல் அதிகரித்து, ஆபத்தாகக் காணப்படுகின்ற பிரதேசங்களை அடையாளப்படுத்தி, அந்தப் பகுதிகளுக்கு முக்கியத்துமளித்து, தடுப்பூசி பெற்றுக்கொடுக்கும் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாகத் தெரிவித்தனர்.

அத்துடன், இந்த அவதான பிரதேசங்களில் தடுப்பூசி நடவடிக்கை வெற்றிகரமாக முடிந்தவுடன் ஏனைய பிரதேசங்களுக்கும் தடுப்பூசிகள் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.






இரண்டாயிரத்தை

# 'பாரபட்சமின்றி வழங்குங்கள்'

## இராதா எம்.பி வேண்டுகோள்

■ நிலமேகம் பிரசாந்த்



பத்து நாள்கள் நாடு முடக்கப்பட்டிருக்கும் இந்நேரத்தில், வருமானத்தை இழந்தவர்களுக்கு இரண்டாயிரம் ரூபாயை வழங்க அரசாங்கத்தால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும், அதனை பாரபட்சமின்றி வழங்க வேண்டுமென மலையக மக்கள் முன்னனி தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வே.இராதாகிருஸ்ணன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

"கடந்த முறை ஐயாயிரம் ரூபாய் வழங்கப்பட்டபோது சில அதிகாரிகள் தமக்கு தேவையானவர்களுக்கு அத்தொகையை வழங்கியதாக குற்றச்சாட்டு எழுந்தது.

"ஐயாயிரம் ரூபாயைப் பெற பல போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. அதேபோல கிடைக்க வேண்டியவர்களுக்கு கிடைக்காமலும் போனது. ஆனால், இம்முறை இவ்வாறு நிகழக் கூடாது. வருமானத்தை இழந்து நிற்கும் குடும்பங்களுக்கு எவ்விதப் பாரபட்சமும் இன்றி இரண்டாயிரம் ரூபாய் நிவாரணத்தொகை முறையான ஒழுங்கமைப்பில், வழங்கப்பட வேண்டும்" என வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மாத்தளை மாவட்ட கொரோனா ஒழிப்பு குழுவால்

# அனுமதிப்பத்திரங்களை வழங்காதிருக்க தீர்மானம்

■ மஹேஸ் கீர்த்திரத்ன

கொரோனா தொற்றைக் கட்டுப்படுத்துவதற்காக முன்னெடுக்கப்பட்டுள்ள செயற்பாடுகளை பயனுள்ளதாக்குவதற்காக, மாத்தளை மாவட்டத்தில் தனிமைப்படுத்தல் அனுமதிப்பத்திரம் மற்றும் வர்த்தக நிலையங்களுக்கான அனுமதிப்பத்திரம் என்பவற்றை விநியோகிக்காமல் இருப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மாத்தளை மாவட்ட கொரோனா ஒழிப்பு குழு கூட்டத்திலேயே மேற்கண்ட தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், குறித்த முடக்கக் காலப்பகுதிக்குள் செயற்பட வேண்டிய முறை தொடர்பில், சுகாதாரப் பணிப்பாளர் நாயகம் மற்றும் பொலிஸாரால் அறிவுறுத்தப்பட்டுள்ள விடயங்களை உரிய முறையில் பின்பற்றவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும், தேவையற்ற பயணங்கள் அனைத்தையும் கட்டுப்படுத்தவும் எதிர்வரும் சில நாள்களில் அத்தியாவசிய பொருள்களை மக்களின் வீடுகளுக்குக் சென்று விநியோகிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அனுமதியின்றி கொண்டு செல்லப்பட்ட

# மதுபான போத்தல்களுடன் ஐவர் கைதாகினர்

■ ரஞ்சித் ராஜபக்ஸ

தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவு அமுலில் இருக்கும் நிலையில், அனுமதிப்பத்திரமின்றி மதுபான போத்தல்கள் மற்றும் பியர் டின்களைக் கொண்டுச் சென்ற ஐவர், பொகவந்தலாவை பொலிஸாரால், நேற்று முன்தினம் (21) கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

தோட்டப்புறங்களில் அதிக விலைக்கு விற்பனை செய்வதற்காக, சந்தேகநபர்கள் 124 மதுபான போத்தல்களையும் 48 பியர் டின்களையும் கொண்டு சென்ற போதே, இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பொகவந்தலாவை பொலிஸாருக்க கிடைத்த தகவலுக்கமையவே, சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டு, பொலிஸ் பிணையில் விடுதலை செய்யப் பட்டுள்ளதுடன்,இவர்களுக்கு எதிரான ஹட்டன் நீதவான் நீதிமன்றில் வழக்கு தொடரவுள்ளதாகவும் பொகவந்தலாவை பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி சாந்த பண்டார தெரிவித்தார்.



நிவாரணப் பொறிமுறையில்

# தொடர்ச்சியாக மலையகம் புறக்கணிப்பு

## வேலுகுமார் எம். பி தெரிவிப்பு

" அரசாங்கத்தின் நிவாரணப் பொறிமுறைக்குள் மலையக பெருந்தோட்டப்பகுதிகளில் வாழும் மக்கள் உள்வாங்கப்படாமல், தொடர்ச்சியாக புறக்கணிக்கப்பட்டு வருகின்றனர் எனத் தெரிவித்த கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வேலுகுமார், எனவே, எமது மக்களுக்கு நிவாரணம் வழங்கும் விசேட வேலைத்திட்டமொன்றை பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சும், பெருந்தோட்டக் கம்பனிகளும் இணைந்து முன்னெடுக்க வேண்டும் என்றார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

"கொரோனா வைரஸ் தாக்கத்தின் முதலாவது மற்றும் 2ஆவது அலைகளால் நாடு முடக்கப்பட்ட போது, அரசாங்கத்தால் ஐயாயிரம் ரூபாய் நிதி நிவாரணம் வழங்கப்பட்டது. எனினும் பெருந்தோட்டப்பகுதிகளில் வாழும் மக்களுக்கு இந்நிவாரணம் முறையாக வழங்கப்படவில்லை. நகரங்கள் மற்றும் கிராமங்களைத்தாண்டி நிதி நிவாரணம் தோட்டப்பகுதிகளுக்கு வரவில்லை.

"தற்போதும் நாடு முடக்கப்பட்டுள்ள நிலையில், பெருந்தோட்டப்பகுதிகளில் வாழும் மக்களுக்கு கடந்த காலங்களில் வேலை நாட்கள் குறைக்கப்பட்டன. ஆயிரம் ரூபாய் கூட முறையாக வழங்கப்படவில்லை. அதேபோல பிற மாவட்டங்களுக்கு தொழிலுக்கு சென்றிருந்தவர்களும் தொழில் இழந்து வீடுகளுக்கு வந்துள்ளனர். இதனால் அவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது.

"எனவே, பெருந்தோட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்க அவசர பொறிமுறை வகுக்கப்பட வேண்டும். தேயிலை சபையின் நிதி கடந்தகாலங்களில் விளம்பர பிரசாரங்களுக்காக பயன்படுத்தப்பட்டது.

"அச்சபையிலுள்ள நிதியைக்கூட தற்காலிகமாக நிவாரணத் திட்டத்துக்கு பயன்படுத்தலாம். பெருந்தோட்டப்பகுதிகளில் மரம் வெட்டுதல், சுற்றுலா உள்ளிட்ட இதர விடயங்களால் இலாபமாக பெற்ற பணத்தை தோட்டக் கம்பனிகளும் பயன்படுத்த வேண்டும்..

"வெற்றிகரமான பொறிமுறை உருவாக்கப்படுமானால் எம்மாலும் நேசக்கரம் நீட்டக்கூடியதாக இருக்கும்" என அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.







# தீவிர சோதனை...

நாட்டில் அமுல்படுத்தப்பட்டுள்ள பொது முடக்கத்தால், இரண்டாவது நாளாகவும் வெறிச்சோடியுள்ள ஹட்டன் நகரில், பொலிஸாரால் சோதனை நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டிருந்தன.
(படம் - எம். கிருஷ்ணா)

மத்திய மாகாணத்தில்


# 50 ஆயிரத்தை நெருங்கும் தொற்று

■ மொஹமட் ஆஸிக்

மத்திய மாகாணத்தின் கண்டி, மாத்தளை, நுவரெலியா ஆகிய 3 மாவட்டங்களிலும் நேற்று (22) வரை, 47, 848 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதற்கமைய, நேற்றுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலத்தில் கண்டி மாவட்டத்தில் 209 தொற்றாளர்களும் மாத்தளை மாவட்டத்தில் 223 தொற்றாளர்களும் நுவரெலியா மாவட்டத்தில் 131 தொற்றாளர்களும் பதிவாகியுள்ளனர் என, மத்திய மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேலும், மத்திய மாகாணத்தில் இதுவரை 1,234 மரணங்கள் பதிவாகியுள்ளன இதில் கண்டி மாவட்டத்தில் 755 மரணங்களும் மாத்தளை மாவட்டத்தில் 262 மரணங்களும் நுவரெலியா மாவட்டத்தில் 217 மரணங்களும் இதுவரை பதிவாகியுள்ளன.



பதுளை– கொழும்பு வீதி

# சாரதிகளுக்கு எச்சரிக்கை

■ ஏ.ஏ.எம்.பாயிஸ்

கொழும்பு- பதுளை வீதியில் மண்சரிவு மற்றும் பாரிய கற்கள் வீதிக்கு உருளும் அபாயம் நிலவுவதால், சாரதிகளுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இப்பிரதேசத்தில் நிலவும் சீரற்ற வானிலையால், இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதுடன், குறிப்பாக பலாங்கொடை- பெலிஹூல் ஓயா, ஹல்தும்முல்ல, பெரகலை, ஹப்புத்தளை வரை இந்நிலை காண ப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதற்கமைய, நேற்று முன்தினம்(21) ஹல்தும்முல்ல பிரதேசத்தில் வீதியில் விழுந்திருந்த கற்கள், பொலிஸாரின் ஒத்துழைப்புடன் அகற்றப்பட்டுள்ளன.

அத்துடன், இவ்வீதியில் வழுக்கும் தன்மை காணப்படுவதால் மாலை, இரவு நேரங்களில் மிக அவதானத்துடன் வானங்களை செலுத்துமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.



தொற்றாளர்கள் தொடர்பில் தகவல் அறிய

# புதிய தொலைபேசி இலக்கங்கள் அறிமுகம்

■ மஹேஸ் கீர்த்திரத்ன

மாத்தளை மற்றும் யட்டவத்த பிரதேச செயலகப் பிரிவுகளில் கொரோனா தொற்றாளர்களின் தகவல்களை அறிந்துக்கொள்ள புதிய தொலைபேசி இலக்கங்கள் அறிமுகப்படுத்தப்பட்டதாக, மாத்தளை மாவட்ட ஒருங்கிணைப்பு குழு தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான நாலக பண்டார கோட்டேகொட தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, யட்டவத்த பிரதேச செயலகப் பிரிவுள்ளவர்களுக்கு 066-4933240, மாத்தளை பிரதேச செயலகப் பிரிவுகளிலுள்ள தொற்றாளர்கள் குறித்து அறிந்துகொள்ள 066- 3132552 என்ற தொலைபேசி இலக்கம் ஊடாகவும் அறிந்துகொள்ள முடியும் என்றார்.

குறித்த தொலைபேசி இலக்கங்கள் 24 மணி நேரமும் செயற்பாட்டில் இருக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.



> குறித்த தொலைபேசி இலக்கங்கள் 24 மணி நேரமும் செயற்பாட்டில் இருக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்

LK Newspapers Viber Community

# அத்தியாவசியமின்றி தலையை வெளியே காட்டுவதே ஆபத்து

எந்தெந்தக் கொத்தணிகள் உருவாகிவிடுமோ என்ற அச்சத்தில் இருந்தவர்களுக்கு, தனிமைப்படுத்தல் ஊரடங்கு அமல்படுத்தப்பட்டமை ஓரளவுக்கு நிம்மதியாகவே இருக்கும். ஆனால், அத்தியாவசிய தேவைகளுக்காக வெளியில் சென்றுவருவோர், சென்றுதிரும்பவே வேண்டும்.

அத்தியாவசியத்துக்குள் தலையை நுழைத்துக்கொள்ளும் பலரும், அத்தியாவசியமின்றி பொது இடங்களுக்கு வந்துவிடுகின்றனர். அவ்வாறானவர்களுக்கு திடீர் அன்டிஜன் பரிசோதனையை மேற்கொண்டு, யாழ்ப்பாணத்தில் நல்லதொரு பாடம் புகட்டப்பட்டுள்ளது. அந்த முறைமையை, நாட்டின் ஏனைய பிரதேசங்களிலும் கடைப்பிடிக்கவேண்டும்.

அப்போதுதான் அத்தியாவசியமின்றி தலையைக்காண்பிப்போர், ஓரளவுக்கேனும் திருந்துவர். இதேவேளை, தடுப்பூசியை ஏற்றிக்கொண்டவர்களுக்கு மட்டுமே அத்தியாவசிய பொருள்களை விற்பனை செய்வதற்கு அனுமதியளிக்கப்படும் என விடுக்கப்பட்டிருக்கும் அறிவிப்பையும் பாராட்டவேண்டும்.

கொரோனாவைத் தடுப்பதற்காக, தடுப்பூசியை ஏற்றிக்கொள்வதே ஒரேவழி. ஆனால், கொரோனா பரவாமல் தடுப்பதற்காக, பலவழிகளை மூடவேண்டியுள்ளது. ஆனால், தருணம் பார்த்து கொள்ளை விலையில் விற்பனைச் செய்துகொள்ளவே நினைக்கின்ற பலரும் ஏதோவொரு வழியில் நுழைந்துகொள்ளவே முயற்சிக்கின்றனர்.

நாட்டின் பொருளாதாரம் முழுயாக பாதிக்காத வகையில், அரசாங்கத்தால் எடுக்கப்பட்டிருக்கும் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்துக்கு, தலையைசாய்த்து வீடுகளுக்குள்ளே முடங்கியிருக்க சகலரும் முயற்சிக்கவேண்டும்.

குறைந்த வருமானம் பெறுவோருக்கு நிவாரணத் தொகையை வழங்கவிருப்பதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. கொரோனா காலத்தில் அத்தியாவசியப் பொருள்களின் விலைகள், ஒவ்வொரு பொழுது புலரும் வேளையிலும் ஐந்து, பத்து ரூபாய்களாக அதிகரிக்கப்பட்டன. இந்நிலையில், 2,000 ரூபாய் நிவாரணம் 'யானைப் பசிக்கு சோளப் பொரி' ஆகவே இருக்கும்

நகர்ப்புறங்களில், நால்வரடங்கிய குடும்பத்தின் ஒரு நாள் செலவுக்கே, ஆகக்குறைந்த தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குக் கூட, இந்த நிவாரணம் போதாது. அந்தளவுக்கு ஒவ்வொரு பொருளின் விலையும் அதிகரித்தே செல்கின்றது.

பெற்றோல் விலையேற்றத்தின் தாக்கம், சாதாரண பாணில் காணப்படுகிறது. இதன் மறுதாக்கம், சாதாரண மக்களின் வயிற்றிலேயே தாக்கத்தை செலுத்தும். ஆகையால், பொருள்களின் விலைகளை அதிகரிக்காமல் இருந்தாலே அதுவே ஒரு நிவாரணமாகும்.

பொதுவான கொத்தணி உருவாகுவதற்கான வாய்ப்புகள் குறைவு, என்றாலும், திறந்திருக்கும் ஏனைய தொழிற்றுறைகளைச் சேர்ந்தவர்கள், சமூக இடைவெளிகளைப் பேணி, சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றி, பணிகளை முன்னெடுக்கவேண்டும்.

அதுமட்டுமன்றி, மூடப்பட்டிருக்கும் நாடு, திறக்கப்படும் போது, பொருள்களின் விலைகள் எகிறியிருக்காமல் நுகர்வோரைப் பாதுகாத்துக்கொள்வது நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் கைகளிலேயே உள்ளது. விலைகள் மட்டுமன்றி, தரத்திலும் கரிசனையை காண்பிப்பது நல்லது. விலைக்கேற்ற பொருளுக்கு உத்தரவாதமளிக்க வேண்டும். அதுவும் சாதாரண பொதுமக்களை பாதுகாப்பதற்கான கருவியாகும். ஆகையால், அத்தியாவசியமின்றி தலையை வெளியில் காட்டுவதைத் தவிர்த்து, கொரோனாவைத் துடைத்தெறிய உறுதிபூணுவோம்.


## தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.



அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

உண்மை பேசாதவர்கள் உளறிக் கொண்டே பேசுவார்கள். அவர்களின் அக உணர்வு உறுத்துவதால் பேச்சு சீராக இருக்காது.

உண்மை பேசுவது கடினமானதே இல்லை. சந்தோஷமான நிலைமையில் மனிதர்களை வைத்திருக்கும். மேலும், அச்சமே இல்லாத நிலையில், இவர்களின் வாழ்க்கையையும் அதிஉச்சத்தில் வைத்துவிடும். உள்ளம் என்பது கூட, உள் 'அகம்' தான். வெளிப்படையாகப் பரந்தநிலையில் எம்மை உருவாக்கியப்படி இருப்பதாகக் கருதவேண்டும்.

என்றும் நீதி, நெறி தவறாது, உண்மையுடன் வாழ்பவர்களின் வாதங்களைப் பாருங்கள். அதில் ஓர் அழகு பளிச்செனத் தெரியும். இதுவே மகோன்னதம் எனப்படும் வியப்பான அழகு நிலை! இது ஒழுக்க வாழ்வின் முழுவடிவமாகும்.

உங்கள் ஜீவ சக்தியைப் பெருக்கிட பேசும் வார்த்தைகளில் தெளிவுடன் கூடிய நேர்மை துலங்கவேண்டும். இதனால் நெஞ்சத்தில் குளுமை தோன்றும். அதுவே சக்தியாக உருவாகி காரிய சித்திகளை உருவாக்கிவிடும்.

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

## ஆப்கானிஸ்தானின் தேச கட்டுமானத் தோல்வி:

# இலங்கை கற்கவேண்டிய பாடங்கள்

**என்.கே. அஷோக்பரன்**

ஜனநாயகம், தாராளவாதம் என்ற பதாகைகளின் சொந்தக்காரர்களாக, மேற்குலகம் தம்மை எப்போதும் நிலைநிறுத்திக் கொள்கிறது.

உலகைத் தன்னுடைய கட்டுப்பாட்டில் வைத்திருப்பதிலும், தன்னுடைய நம்பிக்கைகள், விழுமியங்கள் ஆகியவற்றை மற்றவர் மீது திணிப்பதிலும் மேற்குலகம் என்றும் பின்னின்றதில்லை.

சில நூற்றாண்டுகளுக்கு முன்பு, ஆக்கிரமிப்புக்களையும் கொலனித்துவத்தையும், மேற்குலக அரசுகள், ஆசியாவிலும் ஆபிரிக்காவிலும் தென்னமரிக்காவிலும் அரங்கேற்றிய போது, தம்முடைய நம்பிக்கைகள், விழுமியங்கள் ஆகியவற்றை வன்முறை கொண்டும் திணித்தன என்பது,இரத்தக்கறை படிந்த வரலாறு.

தற்போது, வன்முறை கொண்டல்லாது, தார்மீக உயர் நிலையிலிருந்து தம்முடைய சித்தாந்தங்களையும் கொள்கைகளையும் விழுமியங்களையும் ஏனைய நாடுகள் மீது திணிப்பதிலும் சர்வரோக நிவாரணிகளாக முன்வைப்பதையும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இந்த இடத்தில்தான் மேற்கு பெருஞ்சிக்கலை எதிர்கொள்கிறது.

மேற்குலகம், தான் முன்வைக்கும் விழுமியங்கள், கொள்கைகள், சித்தாந்தங்கள், நம்பிக்கைகள் ஆகியவற்றை விசுவாசமாக நேசிப்பவர்களையும், அதன் பால் உண்மையான நம்பிக்கையுடைய ஒரு தரப்பையும் மேற்கு உருவாக்கினாலும், ஆக்கிரமிப்பு, அழுத்தத்தின் மூலம் தன்னுடைய விழுமியங்கள், கொள்கைகள், சித்தாந்தங்கள், நம்பிக்கைகள் ஆகியவற்றை மேற்குலகம், அவற்றுக்கு அந்நியமான இன்னொரு நாட்டில் திணிக்க முற்படும்போது, மேற்கின் ஆயுத பலம், பொருளாதார பலம், அவற்றின்பாலான அழுத்தம் ஆகியவற்றின் நிமித்தம் தற்காலிகமான வெற்றியை மேற்குலகம் அடைந்தாலும், நீண்ட காலத்தில் அந்த வெற்றி தக்கவைக்கப்படக் கடினமான ஒன்றாக இருப்பதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இதற்கு ஆப்கானிஸ்தான் மிகச்சிறந்த எடுத்துக்காட்டு.

ஆப்கானிஸ்தான் மீதான, அமெரிக்காவின் தலையீடு தேசக்கட்டுமானத்துக்கானது அல்ல என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தற்போது கூறுகின்றார். 2001இல், 9/11 தாக்குதல்களைத் தொடர்ந்து, அமெரிக்கா ஆப்கானிஸ்தான் மீது படையெடுத்த போது, அதன் உண்மையான நோக்கம் பயங்கரவாதத்துக்கு எதிரான போராக இருந்ததேயன்றி, ஆப்கானிஸ்தானில் நவீன தேசம் ஒன்றைக் கட்டியெழுப்புவதாக இருக்கவில்லை.

அன்று, ஆப்கானிஸ்தானை பகுதியளவில் தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்த தலிபான்கள், அல்-கைதா உள்ளிட்ட இஸ்லாமிய பயங்கரவாதிகளுக்கு அடைக்கலமும் ஆதரவும் வழங்கிக்கொண்டிருந்தார்கள். அல்-கைதா அமெரிக்காவின் முதல் எதிரியாக உருவெடுத்திருந்தாலும், பயங்கரவாதிகளுக்கு ஆதரவளிக்கும் தலிபான்களின் ஆட்சியை இல்லாதொழிக்க வேண்டிய நிர்ப்பந்தமும் அமெரிக்காவுக்கு இருந்தது.

இந்த இடத்தில் தலிவுக்கான ஓர் இடையீடு அவசியமாகிறது. அமெரிக்காவின் பார்வையில் அதுவரை தலிபான்கள் பயங்கரவாதிகள் என்பதைக்காட்டிலும், சோவியத் ஒன்றியத்தின் ஆக்கிரமிப்பை எதிர்த்த ஆப்கானிஸ்தானின் விடுதலை வீரர்கள் என்ற புனைவுதான் முன்னிலை பெற்றது. ஏனெனில் அதுதான் அமெரிக்காவின் அன்றைய தேவையாக இருந்தது.

ஆனால், 9/11 அந்தத் தேவையை மாற்றியமைத்திருந்தது. அமெரிக்காவின் தலையீடு அல்-கைதாவின் தலைவர் ஒசாமா பின் லேடனை இல்லாதொழிப்பது என்றால், அது 2011லேயே நடந்துவிட்டதொன்று. அதன் பிறகு, அமெரிக்கா ஏன் ஆஃப்கானிஸ்தானில் தரித்திருந்தது?

ஜனநாயக ரீதியிலமைந்த அரசாங்கமொன்றை ஆப்கானிஸ்தானில் நிலைநிறுத்துவதில் ஏன் கங்கணங்கட்டிக்கொண்டு செயற்பட்டது?

ஆப்கானிஸ்தான் என்ற ஒற்றைத் தேச அடையாளத்தைக் கட்டியமைப்பதில் ஏன் மும்முரமாகச் செயற்பட்டது?

இத்தகைய கேள்விகளுக்கு, அமெரிக்கா, மேற்கின் 'தேசிய அரசு' மாதிரியிலான ஓர் ஆப்கானிஸ்தான் 'தேசிய-அரசை' உருவாக்க விளைந்தது தான் காரணம் என்பது, அனைவரும் இலகுவில் ஊகித்துவிடக்கூடியதொன்றே! அப்படியானால் அது ஏன் தோல்வி கண்டது?

தன்னுடைய விழுமியங்கள், கொள்கைகள், சித்தாந்தங்கள், நம்பிக்கைகள் ஆகியவை பற்றி, மேற்குலம் மிக அதீத தார்மீக உயர்நிலைச் சிந்தனையைக் கொண்டுள்ளது. அதாவது, தன்னுடைய சித்தாந்தங்கள், மனித குலத்துக்குப் பொதுவாகப் பொருந்திப் போகத்தக்க, மனித குலத்துக்கு அதியுயர் நன்மையை விளைவிக்கத்தக்கவைகள் என்ற சிந்தனையை மேற்குலகம், குறிப்பாக அமெரிக்கா கொண்டுள்ளது. அதன் விளைவாகத்தான், ஜனநாயகம், தாராளவாதம் ஆகியவற்றை ஏனைய நாடுகளுக்கு ஏற்றுமதிசெய்வதில் அவை மும்முரமாகச் செயற்படுகின்றன. தம்மைப் போன்ற 'தேசிய அரசு'களை ஏனைய நாடுகளில் கட்டியெழுப்பிவிட முடியும் என்றும் அவை உறுதியாக நம்புகின்றன; அந்த நம்பிக்கையில் முதலிடுகின்றன.

இவற்றின் மூலம், குறித்த நாடுகளில் மிகச் சொற்ப மக்கள் கூட்டத்தைத் தமது சித்தாந்தங்களை நோக்கிக் கவர்ந்திழுப்பதில் வெற்றி கண்டாலும், அந்நாட்டின பெரும்பான்மை மக்களைக் கவர்ந்திழுப்பதில் அவை தொடர்ந்து தோல்வி காண்கின்றன. இதற்குக் காரணம், அந்தந்த நாடுகளுக்கே உரிய தனித்துவமான தன்மைகளை மேற்குலகு புரிந்துகொள்ளாது போனமையாகும்.

ஆப்கானிஸ்தான் என்பது வேறுபட்ட பல்வேறு இனக்கூட்டங்களையும், மக்கள் கூட்டங்களையும் கொண்ட நிலப்பரப்பு. 2004இல் மேற்கின் ஆதரவுடன் உருவான ஆப்கானிஸ்தான் அரசியலமைப்பு 14 இனக்கூட்டங்களை அடையாளப்படுத்துகிறது.

2001இற்கு முன்னர், தலிபான்களால் முழு ஆப்கானிஸ்தானையும் கைப்பற்ற முடியாது இருந்தமைக்குக் காரணமும், இந்த இன அடையாள வேறுபாடுகள்தான். தலிபான்கள் பஷ்தூன்கள். பஷ்தூன் மக்களிடையேதான் அவர்களுக்கு ஆதரவுண்டு. பஷ்தூன்கள் ஆஃப்கானிஸ்தானின் நிலப்பரப்புக்கு மட்டும் உரியவர்கள் அல்ல; அத்தோடு இணைந்த பாகிஸ்தானிலும் அவர்கள் கணிசமாக வாழ்கிறார்கள். பாகிஸ்தானின் இன்றைய பிரதமர் இம்ரான் கானும், பஷ்தூன் இனத்தவரே ஆவர்.

ஆப்கானிஸ்தானின் ஏனைய பல இனத்தவர்கள், தலிபான்களை ஏற்கத்தயாராக இருக்கவில்லை. தலிபான்களுக்கு எதிரான போரை அவர்கள் செய்தார்கள். இதில், ஆப்கானிஸ்தானின் பஞ்ச்ஷீர் மலைப்பகுதியில் எழுந்த தஜிக் இனத்தை சார்ந்த அஹமட் ஷா மசூத் தலைமையிலான முஜாஹிதீன்களின் எதிர்ப்பு முக்கியத்துவம் மிக்கது. இவர்களும், ஏனைய தலிபான் எதிர்ப்பாளர்களும் சேர்ந்து தலிபான்களுக்கு எதிராக எதிர்ப்பு எதிரணியாக இயங்கினர்.

9/11இற்கு சில மாதங்கள் முன்பு, 'பஞ்ச்ஷீரின் சிங்கம்' என்றறியப்பட்ட மசூத் அல்-கைதா பங்கரவாதிகளால் கொல்லப்பட்டார். ஆகவே, இவ்வாறு அடிப்படையிலேயே இனக்கூட்டங்களால் பிரிவடைந்த நிலப்பரப்பொன்றில், 'ஆப்கானிஸ்தான்' என்று, ஒன்றுபட்ட தேசிய-அரசொன்றைக் கட்டியெழுப்புவது ஒரு தசாப்தத்திலோ, இரண்டு தசாப்தத்திலோ அமெரிக்காவின் ஆயுத பலம், பண உதவி ஆகியவற்றைக்கொண்டு செய்துவிடக்கூடியதொன்றல்ல.

இதை அமெரிக்கா புரிந்துகொள்ளாததன் விளைவுதான் 2001இற்கு முன்னர் தலிபான்கள் பகுதியளவில் மட்டும் கட்டுப்பாட்டில் வைத்திருந்த ஆப்கானிஸ்தானை, இன்று ஏறத்தாழ முழுமையான தலிபான் ஆக்கிரமிப்பில் கையளித்துவிட்டு வெளியேறி இருக்கிறது அமெரிக்கா. ஆனால், இது முடிவல்ல. அஹ்மட் ஷா மசூத்தின் மகன் அஹமட் மசூத் தனது தந்தையின் வழியில் தலிபான்களுக்கு எதிரான எதிர்ப்புப் போரைத் தொடங்கியுள்ளார்.

ஆப்கானிஸ்தானின் இந்த நிலையிலிருந்து, இலங்கை கற்றுக்கொள்ளக் கூடிய பாடங்கள் என்ன என்ற கேள்விக்கான பதிலை நாம் சுருக்கமான அணுகினால், இலங்கை என்ற ஒற்றைத் தேசிய-அரசைக் கட்டியெழுப்புவதில், 74 வருடங்காக இலங்கை அடைந்துள்ள தோல்விக்கான காரணத்தை நாம் உணர்ந்துகொள்ள முடியும்.

அத்தகைய தேசிய-அரசைக் கட்டியெழுப்பும் வாய்ப்பு, சுதந்திர காலத்தில் இலங்கையிடம் இருந்தாலும், இலங்கையின் அரசியல், இலங்கையை இன ரீதியில் பிளவடைந்த மக்கள் கூட்டங்களைக் கொண்ட நாடாகவே 74 வருடங்களாக கட்டமைத்துவிட்டது. ஆகவே ஒற்றைத் 'தேசிய-அரசு' என்ற முகமூடிக்குக் கீழ், இன ரீதியில் பிளவடைந்த மக்கள் கூட்டங்களைக் கொண்ட நாடாகவே இலங்கை விளங்குகிறது என்பது மறுக்க முடியாத உண்மை.

ஒரு மிகச் சொற்ப உயர்குழாம், தாராளவாத இலங்கை தேசிய-அரசில் நம்பிக்கை கொண்டு, அதனை மீளுரைத்துக் கொண்டிருப்பதால் மட்டும், இலங்கை மேற்குலகம் வரையறுப்பதன்படியான ஒற்றைத் தேசிய-அரசாகக் கட்டமைந்துவிடும் என்று நம்புவது அர்த்தமற்றதே.

இலங்கை ஒற்றை அரசாக இருந்தாலும், அந்த அரசுக்குள் ஒற்றைத் தேசம் கொண்ட தேசிய-அரசு என்பது யதார்த்தத்திலிருந்து விலகிய தார்மீக உயர்நிலைக் கற்பிதம் என்பதுதான் கசப்பான உண்மை. அப்படியானால் இதற்குத் தீர்வுதான் என்ன?

மேற்குலகம் தன்னுடைய நாட்டில் சாத்தியமான ஒன்று, அதேவகையில் தம்மிலிருந்து மிக அந்நியமான வேறொரு நாட்டில் சாத்தியமாகும் என்ற நம்பிக்கையை கைவிட வேண்டும். மாறாக, மனித குலத்துக்கு நன்மை பயக்கும் சிந்தனைகளை அந்த மக்களிடமிருந்து வளர்ப்பதற்கான உதவிகளையும் ஆதரவினையும் வழங்கவேண்டும்.

மனித உரிமைகள் என்பது உலகின் அனைவருக்கும் பொதுவானது. ஆனால், ஆட்சிமுறை, அரச கட்டமைப்புகள் என்பன அப்படி அல்ல. பிரித்தானியாவுக்கும் அமெரிக்காவுக்குமே ஜனநாயகம், ஆட்சிக் கட்டமைப்புக்கள் ஒன்றாக இல்லாத போது, உலகுக்கே பொதுவான ஆட்சிமுறையை, அரச கட்டமைப்பை சர்வ ரோக நிவாரணியாக மேற்குலகம் ஏனைய நாடுகளிடம் திணிப்பதை கைவிட வேண்டும்.

மாறாக, அந்தந்த நாடுகளில் தனித்துவத் தன்மைகளைக் கருத்திற்கு கொண்டு, அதற்கேற்றாற் போன்ற தீர்வுகள் வடிவமைக்கப்பட்டால் மட்டுமே, அவை நீடித்து நிலைக்கக் கூடியவையாக அமையும்.

## கடிதங்கள்



### பஸ் தரிப்பிட நிழற்குடையை புனரமைக்கவும்

வவுனியா, நொச்சிமோட்டை கிராம அலுவலர் பிரிவிலுள்ள சாந்தசோலை பிரதான வீதியில் காணப்படும் பஸ் தரிப்பிட நிழற்குடை, நீண்டகாலமாக சேதமடைந்து காணப்படுகின்றது. இதைப் புனரமைத்து, மக்களின் பயன்பாட்டுக்கு அனுமதிக்குமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளார்கள்.

யாழ்ப்பாணம் -. கண்டி வீதியில் காணப்படும் சாந்தசோலை செல்லும் பிரதான பகுதியில் அமைக்கப்பட்ட பஸ் தரிப்பிட நிழற்குடையின் கூரை தகடுகள், கடந்த சில தினங்களுக்கு முன்னர் காற்றால் அடித்துச் செல்லப்பட்டுள்ளன. இதனால், தற்போது காணப்படும் வெப்பமான வானிலையால்,: பஸ் தரிப்பிடத்தில் காத்திருப்பவர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றார்கள். இந்தப் பஸ் தரிப்பிட நிழற்குடையைப் புனரமைத்து, மக்களின் பயன்பாட்டுக்குப் பெற்றுத்தருமாறு, அப்பகுதி மக்கள் தகுதிவாய்ந்த அதிகாரிகளிம் கோரிக்கை முன்வைக்கின்றார்கள்.

க. அகரன்

### இலங்கையின் விவசாய சூழல் கட்டமைப்புக்கு உகந்த

# திட்டத்தை தயாரிக்க பவர் நடவடிக்கை



ஏ. பவர் அன்ட் கம்பனி (பிரைவட்) லிமிடெட், நாட்டின் விவசாயத் துறைக்கு பாரம்பரிய இரசாயன உரப் பயன்பாட்டிலிருந்து சேதன உரப் பயன்பாட்டுக்கு மாறிக் கொள்வதற்கு அவசியமான விஞ்ஞான ரீதியான மற்றும் பிரயோக ரீதியான தீர்வுகளை நிபுணத்துவ மற்றும் பிரயோக அனுபவங்களிலிருந்து வழங்குவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்வதாக அறிவித்துள்ளது.

Research Institute of Organic Agriculture (FiBL) மற்றும் School of Agricultural, Forest and Food Sciences (HAFL) ஆகியவற்றைச் சேர்ந்த சிரேஷ்ட விஞ்ஞானிகள் மற்றும் ஆய்வாளர்களைக் கொண்ட நிபுணர் அணியினர் இலங்கைக்கு 10 நாள் விஜயமொன்றை மேற்கொண்டிருந்ததுடன், இக்காலப்பகுதியில் இலங்கையில் ஆழமான பகுப்பாய்வுகள் மற்றும் மதிப்பாய்வுகளை முன்னெடுத்திருந்தனர். இந்த விஜயத்தின் நோக்கம், இலங்கையின் நோக்கமும் எதிர்பார்ப்புமான தற்போதைய 2.5 சதவீதமாக அமைந்துள்ள சேதன விவசாய நடவடிக்கைகளை விரிவாக்கம் செய்து, ஆரோக்கியமான சேதன விவசாய நடவடிக்கைகளை முன்னெடுக்கும் தேசமாக தரமுயர்த்துவதாக அமைந்துள்ளது.

ஏ. பவர் அன்ட் கம்பனி (பிரைவட்) லிமிடெட் முகாமைத்துவ பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான ரொல்ஃவ் பிளாசர், இந்தத் திட்டத்தின் பிரதான காரணகர்த்தாவாக அமைந்திருப்பதுடன், இவர் கருத்துத் தெரிவிக்கையில், "இலங்கையில் விவசாய உர சவால்களில் நேர்த்தியான படிமுறைகளை மேற்கொண்டிருந்ததையிட்டு நாம் பெருமை கொள்கின்றோம். சேதன விவசாயத்துக்கான பெருமைக்குரிய ஆய்வுகளின் இருப்பிடமாகக் கருதப்படும் சுவிட்சர்லாந்தைச் சேர்ந்த நிபுணர்கள் குழுவினரை நாம் இதற்காக அழைத்து வந்து, நாடு முழுவதிலும் பரந்துபட்ட ஆய்வை மேற்கொண்டிருந்தோம்." என்றார்.

"இந்த நிபுணர்கள் தற்போது தமது ஒழுங்கமைப்பு பணிகளை ஏனைய நிறுவனங்களுடன் மேற்கொள்வதுடன், உள்நாட்டில் பெற்றுக் கொண்ட கல்விசார் மற்றும் பிரயோக அனுபவங்கள் அடங்கலாக, விடயம் தொடர்பான பரந்த அறிவைக் கொண்டு பணியாற்றுகின்றோம். பவர் நிறுவனத்தைச் சேர்ந்த நாம், நிபுணர்களுடன் தொடர்ச்சியான ஈடுபாட்டைப் பேணி, அடுத்த சில வாரங்களில் நாட்டுக்கும் துறைக்கும் அவசியமான முறையான வடிவமைக்கப்பட்ட திட்டமொன்றை தயாரிப்போம்." என்றார்.

விவசாயத் திணைக்களம், பேராதனை பல்கலைக்கழகத்தின் விவசாய பீடம், NIFS, RRISL, CRI, CEOA, பெருந்தோட்டத் துறை அமைச்சு, MoSTR, சேதன விவசாய அரச செயலகங்கள், IFOAM, GIZ ஸ்ரீ லங்கா, SLCARP மற்றும் உள்நாட்டு ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதி ஆகியவற்றின் சிரேஷ்ட அதிகாரிகளுடன் நிபுணர்கள் கலந்துரையாடல்களை முன்னெடுத்திருந்தது.

சேதன விவசாயத்தில் பங்களிப்பு வழங்கக்கூடிய பகுதிகள் மற்றும் வசதிகளான கெரவலபிட்டிய கழிவு முகாமைத்துவ பூங்கா, சேதன உர பதப்படுத்தல்கள், தம்புளை மரக்கறி சந்தை, மெனிங் சந்தை மற்றும் மீன் சந்தை, HTS Hidellana தேயிலைத் தொழிற்சாலை, கிரான்ட் ஹோட்டலில் ஹோட்டல் கழிவு முகாமைத்துவ கட்டமைப்பு, லேக் செரெனிட்டி சேதன தேயிலை பெருந்தோட்டம், கனேமுல்லயிலுள்ள கோழிப் பண்ணை, புத்தளம், அனுராதபுரம், கம்பஹா மற்றும் இரத்தினபுரிய ஆகிய பகுதிகளைச் சேர்ந்த சேதன மற்றும் பாரம்பரிய விவசாய சமூகங்களுடனான சந்திப்புகள் போன்றவற்றை அவர்கள் மேற்கொண்டிருந்தன.

இவர்களின் விஜயத்தின் போதான ஒவ்வொரு கண்டறிதல்களும் நாட்டின் தற்போதைய விவசாய கட்டமைப்பு பற்றிய புரிந்துணர்வைப் பெற்றுக் கொள்ள உதவியாக அமைந்திருந்ததுடன், ஒட்டு மொத்த சூழல் கட்டமைப்புடன் தொடர்புடைய இதர காரணிகளைப் பற்றி அறிந்து கொள்ளவும் உதவியாக இருந்தது. நிபுணர்கள் குழுவினரால் தமது கண்டறிதல்களின் போது பெருவாரியான விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப தரவுகளை திரட்ட முடிந்தது. பரந்தளவு பங்காளர்களுடனான பல்வேறு கலந்துரையாடல்கள், தொடர்பாடல்கள் மற்றும் அறிவு பகிர்வு அமர்வுகள் போன்ற அனைத்தும் இந்த மாற்றத்தை எய்துவதற்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்திருந்ததுடன், சவால்களை நிவர்த்தி செய்வதற்கும் உதவியாக அமைந்திருந்தன.

இலங்கையில் தங்கியிருந்த காலப்பகுதியில், களனியிலுள்ள பவர் உரத் தொழிற்சாலையில் (CMW) இடம்பெற்ற அறிவு பகிர்வு அமர்வின் போது நிபுணர்கள் குழுவினரால் அர்த்தமுள்ள கருத்துப்பகிர்வுகள் இடம்பெற்றதுடன், அதனைத் தொடர்ந்து அனுராதபுரத்திலுள்ள பவர் வளாகத்துக்கான விஜயத்தின் போது கொம்போஸ்ட் மற்றும் சேதன பயிர்ச் செய்கை தொடர்பான பயிற்சிகளும் வழங்கப்பட்டிருந்தன.

## One Galle Face Business Tower இல் ESOFT இன்டர்நஷனல் கம்பஸ் வளாகம்

*ESOFT* குழுமம், தனது நவீன வசதிகள் படைத்த *ESOFT* இன்டர்நஷனல் கம்பஸ் *(EIC)* வளாகத்தை *2021* செப்டெம்பர் மாதத்தில் *One Galle Face (Shangri-La) Business Tower* இல் நிறுவத் திட்டமிட்டுள்ளது.

புதிய நவீன வசதிகள் படைத்த சர்வதேச கம்பஸ் ஒன்றிலிருந்து கிடைக்கும் வசதிகளை அனுபவிக்க எதிர்பார்க்கும் மாணவர்களுக்கு, முதல் அல்லது இரண்டாவது வருடத்தில் கல்வி பயின்றதன் பின்னர் இலங்கையின் தனியார் கல்வித் துறையில் EIC ஒப்பற்ற அனுபவத்தை வழங்குவதாக அமைந்திருக்கும். EIC இல் கல்வியைத் தொடரும் மாணவர்களுக்கு உலகத் தரம் வாய்ந்த, தரமான சொகுசான அம்சங்கள் நிறைந்த சூழலில் தமது கல்வியைத் தொடரக்கூடியதாக இருக்கும்.

வியாபாரம், கணினி மற்றும் சட்டம் தொடர்பான கட்டமைக்கப்பட்ட பட்டப்படிப்புகளை வழங்கும் வகையில் ESOFT இன்டர்நஷனல் கம்பஸ் அமைந்துள்ளது. அதற்காக லண்டனின் Kingston பல்கலைக்கழகத்துடன் கைகோர்த்துள்ளது. ஒப்பற்ற பாடவிதானத்துடன், EIC ஐச் சேர்ந்த மாணவர்களுக்கு BSc (Hons) in Cyber Security and Digital Forensics, BSc (Hons) in Multimedia Technology, BSc (Hons) in Entrepreneurship and Innovation, BSc (Hons) in International Business, மற்றும் LLB மற்றும் graduate பட்டங்களை EIC இடமிருந்து அல்லது பிரித்தானியாவின் Kingston University London இடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

கொழும்பின் காலி முகத் திடலுக்கு முகப்பான பகுதியில், இந்து சமுத்திரத்தின் பரந்த காட்சியமைப்புடன் இந்த பிரத்தியேகமான கம்பஸ் வளாகம் அமைந்துள்ளது. இந்த வளாகத்தில் நவீன வகுப்பறை பயிலல், நூலகங்கள் வசதிகள், பரந்தளவு பொழுதுபோக்கு வசதிகள், நவீன ஆய்வுகூட வசதிகள் போன்றவற்றுடன், நவீன தொழில்நுட்ப ஒன்றிணைப்பு, போன்றன வழங்கப்பட்டு, சர்வதேச பயிலல் அனுபவத்தை தொடர்வதற்கான நம்பிக்கையும், சௌகரியமும் வழங்கப்படுகின்றன.

ESOFT குரூப் ஒஃப் கம்பனிஸ் தவிசாளர் கலாநிதி, தயான் ராஜபக்ச இந்த புதிய வளாகத்தின் அறிமுகம் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையில், "மாணவர்களுக்கு சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட கற்கைகளைத் தொடர்வதற்கான வாய்ப்பை வழங்கி, பிரயோகத் திறன்களுடன், தொழிற்துறைசார் வலையமைப்பு மற்றும்



நிஜ உலக அனுபவங்களை பெற்றுக் கொள்ள வழிகோலுவதாக அமைந்துள்ளது. இதனூடாக, எமது மாணவர்களுக்கு ஐக்கிய இராஜ்ஜியத்தில் பயிலும் வகையில் இலகுவாக மாற்றியமைத்து, தயார்ப்படுத்திக் கொள்ளக்கூடியதாக இருக்கும். இதை மேற்கொள்ளும் வகையில் ESOFT இன்டர்நஷனல் கம்பஸ் வடிவமைக்கப்பட்டுள்ளது." என்றார்.

தென் மேற்கு லண்டன் பகுதியில் தேம்ஸ் நதிக் கரையை அண்மித்த பொது ஆய்வு பல்கலைக்கழகமாக *Kingston University London* திகழ்கின்றது. மத்திய லண்டனிலிருந்து *25* நிமிடங்களில் புகையிரதத்தில் பயணிக்க முடியும். *100* வருடங்களுக்கு மேலான பழமை வாய்ந்த இந்த பல்கலைக்கழகம், சர்வதேச ரீதியில் வளர்ந்து வரும் கீர்த்தி நாமத்தைக் கொண்டுள்ளது. பல்வேறு பங்காண்மைகள் மற்றும் முன்னணி ஆய்வுகளில் பங்கேற்றுள்ளது. நான்கு கம்பஸ்களில் ஐந்து வளாகங்களைக் கொண்டுள்ளதுடன், மொத்தமாக *20000* மாணவர்கள் தொகையையும் தன்வசம் கொண்டுள்ளது. *2021* ஆம் ஆண்டுக்கான *Guardian University Guide league tables* இல் நாட்டிலுள்ள சிறந்த *40* நிலையங்களில் ஒன்றாக *Kingston University* பட்டியலிடப்பட்டுள்ளது.

*2021* செப்டெம்பர் மாணவர் சேர்ப்புக்காக தற்போது விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் பணிகளை *EIC* மேற்கொள்கின்றது. மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்புடன், வருடமொன்றில் ஒரு தடவை மாத்திரம் ஆட்சேர்ப்பு இடம்பெறவுள்ள நிலையில், அனுமதிகள் விரைவில் பூர்த்தியாகிவிடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

சென்னை

### வழக்கறிஞர்கள் மோதல்;

# மன்றுகளில் ஆஜராக இடைக்காலத் தடை

கோட்டூர்புரம்பொலிஸ் நிலையத்தில் மோதலில் ஈடுபட்ட 7 வழக்கறிஞர்கள் நீதிமன்றங்களில் ஆஜராகவும், தொழில் செய்யவும் தமிழ்நாடு வழக்கறிஞர்கள் சங்கம் இடைக்கால தடை விதித்துள்ளது.

கோட்டூர் நாயுடு தெரு 4ஆவது சந்தில் சிமெண்ட் சாலை போட்டால், தன் வீட்டுக்குள் மழைநீர் புகுந்துவிடும் என்று கூறி, உயர் நீதிமன்ற வழக்கறிஞர் பத்மநாபன் எதிர்ப்பு தெரிவித்துள்ளார். இதையடுத்து, தாமஸ் தளசீலன் என்பவர் கடந்த பெப்ரவரியில் பத்மநாபனுக்கு எதிராக கோட்டூர்புரம் பொலிஸில் புகார் கொடுத்துள்ளார். இந்த நிலையில், சிமெண்ட் சாலை அமைப்பது தொடர்பாக அவர்கள் இடையே மீண்டும் பிரச்சினை ஏற்பட்டுள்ளது. இதில் இரு தரப்பு வழக்கறிஞர்களும் கோட்டூர்புரம் பொலிஸ் நிலையத்துக்குள் மோதலில் ஈடுபட்டு, ஒருவரை ஒருவர் கடுமையாக தாக்கிக் கொண்டனர். இந்த சிசிடிவி பதிவுகள் சமூக வலைதளங்களில் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியது.

இதுதொடர்பாக வழக்கறிஞர் பத்மநாபனின்



மனைவி கொடுத்த புகாரின் பேரில்,வழக்கறிஞர்கள் 4 பேர் மீதும் பொலிஸார் வழக்கு பதிவு செய்தனர்.

இந்நிலையில், அதன்பேரில், வழக்கறிஞர்கள் சங்கத் தலைவர் தலைமையில் அவசர கூட்டம்நடத்தப்பட்டது. இதில், 7 பேர் மீதான ஒழுங்குநடவடிக்கை விசாரணை முடியும் வரை, இந்த 7 பேரும் நீதிமன்றங்கள், தீர்ப்பாயங்களில் ஆஜராகவும், வழக்கறிஞராக தொழில் செய்யவும் இடைக்கால தடை விதித்து நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வழக்கறிஞர்கள் தெரிவித்துள்ளனர்.



ஸ்ரீநகர்

## எதிர்க்கட்சித் தலைவர்கள் ஏன் வாய் திறக்கவில்லை?

எதிர்க்கட்சித் தலைவர்கள், சட்டப்பிரிவு 370 குறித்து வாய் திறக்காமல் இருப்பதைப் பார்த்தால், ஜம்மு - காஷ்மீரிடம் இருந்து சிறப்பு அந்தஸ்து பறிக்கப்பட்டதற்கு அவர்கள் ஆதரவு தெரிவிப்பது போல் உள்ளது' என ஜம்மு-காஷ்மீர் மக்கள் மாநாட்டு கட்சி கூறி உள்ளது.

காங்கிரஸ் உள்ளிட்ட 19 எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த தலைவர்கள் 'வீடியோ கொன்பரன்ஸ்' வாயிலாக ஆலோசனை நடத்தினர். அதில் ஜம்மு-காஷ்மீருக்கு மாநில அந்தஸ்தைத் திரும்ப வழங்கக் கோரியும் கைது செய்யப்பட்டுள்ள அரசியல் கட்சித் தலைவர்களை விடுவிக்கவும் வலியுறுத்தப்பட்டது.

இந்நிலையில் ஜம்மு-காஷ்மீர் மக்கள் மாநாட்டு கட்சியின் செய்தித் தொடர்பாளர் கூறியதாவது: நாட்டிலுள்ள 19 எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த தலைவர்கள் நடத்திய ஆலோசனைக் கூட்டத்தில் சட்டப்பிரிவு 370 மற்றும் 35 ஏ குறித்து யாரும் வாய் திறக்கவில்லை. இது ஜம்மு - காஷ்மீரின் சிறப்பு அந்தஸ்தை பறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கையை ஏற்கும் வகையில் அமைந்துள்ளது.


அந்த கூட்டத்தில் பங்கேற்ற தேசிய மாநாட்டு கட்சியின் பரூக் அப்துல்லா மற்றும் மக்கள் ஜனநாயக கட்சியின் மெஹபூபா முப்தியும் கூட இந்த விஷயத்தில் இதர எதிர்க்கட்சிகளை சமரசம் செய்ய தவறிவிட்டனர். எதிர்க்கட்சிகளிடம் இது குறித்து பேசாத இந்த மூத்த தலைவர்கள் அந்தக் கூட்டத்தில் பங்கேற்றது ஏன்? ஜம்மு - காஷ்மீர் மக்களை இவர்கள் இருவரும் வஞ்சித்துவிட்டனர். இவ்வாறு அவர் கூறினார்.

## ஓணம் பண்டிகை விருந்தில் ராகுல்

கேரளாவின் மலப்புரம் மாவட்டத்தில் வண்டூரில் நடந்த ஓணம் விருந்து ஒன்றில் காங்கிரஸ் தலைவர் ராகுல் கலந்து கொண்டு உணவருந்தினார்.

கேரளாவின் மிக முக்கிய பண்டிகையாக ஓணம் கருதப்படுகிறது. மலையாள வருடத்தின் பிறப்பை குறிக்கும் இந்த பண்டிகை 10 நாட்கள் வரை மாநிலம் முழுவதும் விமர்சையாக கொண்டாடப்படும். ஓணத்தின் போது பெண்கள் அத்தப்பூக்கோலமிட்டு மகிழ்வார்கள்.

ஓணம் பண்டிகையின் முக்கிய அங்கமாக ஓணம் சத்யா என்ற விருந்து கருதப்படுகிறது. இதில் மலையாள பாரம்பரிய உணவு வகைகள் வாழை இலையில் பரிமாறப்படும். இது போன்ற



ஒரு விருந்து கேரளாவின் மலப்புரம் மாவட்டத்தில் உள்ள காந்தி பவன் ஸ்னேகாரமம் என்ற முதியோர் இல்லத்தில் நடந்தது. அந்த விருந்தில் காங்கிரஸ் தலைவர் ராகுல் அங்கு தங்கியிருக்கும் முதியவர்களுடன் அமர்ந்து கேரள பாரம்பரிய உணவு வகையான சாதம், சாம்பார், பப்படம், இஞ்சி புளி, பச்சடி ஆகியவற்றை ருசித்து சாப்பிட்டார்.


போபால்

## சிறுத்தையின் பிடியிலிருந்து குழந்தையைக் காப்பற்றிய அப்பா

மனிதன் உலகத்தில் எங்கு எங்கெல்லாம் வாழலாமோ வாழ்ந்து கொண்டுதான் இருக்கின்றான். சிலர் நகரங்களிலும் சிலர் கிராமங்களிலும் வாழ்கின்றனர். இதேவேளை,இன்னும் சிலர் வனாந்திரங்களுக்கருகிலும் வாழ்கின்றனர்.

மத்திய பிரதேசத்தில் குனா தேசிய வனவிலங்குகள் பூங்காவின் அருகேயுள்ள துரா கிராமத்தில் வசித்துவரம் ஒரு குடம்பத்தில் இடம்பெற்ற மெய்சிலிர்க்கும் சம்பவம். கடந்த இரவு கணவனும் மனைவியும் தங்கள் 2 வயது பேத்தியுடன் வீட்டில் தூங்கிக் கொண்டு இருந்தனர்.

திடீரென குழந்தை அலறும் சத்தம் கேட்டு விழித்த கணவன் (குழந்தையின் அப்பா) சிறுத்தையொன்று குழந்தையின் காலை கவ்விப்பிடித்து இழுத்துச் செல்ல முயற்சிப்பதை பார்த்து



அதிர்ச்சி அடைந்தார். கூச்சல் போட்ட அவர், சிறுத்தையை பலமாக எட்டி உதைத்தான். பேத்தியை காப்பாற்ற தன் பலம் முழுவதையும் திரட்டி சிறுத்தையை தாக்கினார்.

இதனால் குழந்தையை விட்ட அந்த சிறுத்தை தம்பதியை தாக்கியது. பெரும் கூச்சல் எழுந்ததால் கிராமத்தினர் ஆயுதங்களுடன் அவ்விடத்துக்குத் திரண்டனர்; சிறுத்தை வனத்துக்குள் ஓடியது. காயமடைந்த தம்பதிமற்றும் குழந்தையை வனத்துறையினரின் உதவியுடன் மருத்துவமனையில் அனுமதித்தனர்.

வேலூர்

## பச்சிளம் குழந்தையை ரயிலில் மீட்ட காவலர்கள்



யாரோ பெற்ற தனது குழந்தையை ரயிலில் விட்டுச்சென்ற சம்பவமொன்று காட்பாடி ரயில் நிலையத்தில் இடம்பெற்றுள்ளது. இதுதொடர்பாக தெரியவருவதாவது; ரயிலில் பிறந்து சில நாட்களே ஆன பச்சிளம் குழந்தையை, ரயில்வே காவல் துறையினர் மீட்டு காப்பகத்தில் ஒப்படைத்தனர்.

ஜோலார்பேட்டையில் இருந்து அரக்கோணம் செல்லும் 'வொர்க் மேன் கோச்' ரயில் காட்பாடி ரயில் நிலையத்துக்கு 3ஆவது நடைமேடையில் கடந்த இரவு 8 மணியளவில் நின்றது. அப்போது, காட்பாடி ரயில்வே உதவி ஆய்வாளர் தலைமையிலான காவலர்கள் ரயிலில் சோதனையில் ஈடுபட்டனர். அப்போது, சந்தேகத்துக்கு இடமளிக்கும் வகையில் இருந்த கட்டைப் பையை எடுக்க முயன்றனர். அதில், பிறந்த சில நாட்களே ஆன பெண் பச்சிளம் குழந்தை இருந்தது. இதைப் பார்த்து அதிர்ச்சியடைந்த ரயில்வே காவல் துறையினர் குழந்தையை பத்திரமாக மீட்டனர். பின்னர், ரயில்வே மருத்துவமனையில் குழந்தையைப் பரிசோதித்தனர். அதில், குழந்தை நல்ல உடல் நலமுடன் இருப்பதும் பிறந்து 3 நாட்கள் ஆகி இருக்கும் என்றும் தெரியவந்தது. இந்த குழந்தையை வாணியம்பாடியில் உள்ள குழந்தைகள் காப்பகத்தில் காவல் துறையினர் ஒப்படைத்ததுடன் குழந்தையை விட்டுச் சென்றவர்கள் யார் என விசாரித்து வருகின்றனர்.




எல்லை மோதல்; காஸாவிலுள்ள

# ஹமாஸ் நிலைகளில் இஸ்ரேல் தாக்குதல்

பலஸ்தீனத்தின் காஸாவிலுள்ள ஹமாஸ் நிலையங்களை இஸ்ரேலிய விமானங்கள் நேற்று முன்தினம் இரவு தாக்கியதாக இஸ்ரேலிய இராணுவம் தெரிவித்துள்ளது.

முன்னதாக எல்லை தாண்டிய துப்பாக்கிச் சூட்டில் இஸ்ரேலியப் படைவீரர் ஒருவர் பலத்த காயமடைந்ததுடன், 41 பலஸ்தீனர்கள் காயமடைந்திருந்தனர். இதில், இரண்டு பலஸ்தீனர் உயிருக்கு ஆபத்தான நிலையில் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஜெருசலேத்துக்கு ஆதரவான காஸாவை ஆட்சி செய்யும் ஹமாஸ் மற்றும் ஏனைய பிரிவுகளால் ஒழுங்கமைக்கப்பட்ட காஸா போராட்டம் ஒன்றை அடுத்தே இக்காயங்கள் ஏற்பட்டிருந்தன.



## மெக்ஸிக்கோ கிரேஸ் புயல்

பலத்த மழையுடன் மெக்ஸிக்கோவை கிரேஸ் புயல் நேற்று முன்தினம் தாக்கியது. இதனால் ஏற்பட்ட கடும் வெள்ளம், நிலச்சரிவில் குறைந்தது எட்டுப் பேர் உயிரிழந்துள்ளனர்.




தென்மேற்கு நைகர் கிராம

## தாக்குதலில் 16 பேர் பலி

தென் மேற்கு நைகரிலுள்ள தியெம் கிராமம் மீதான தாக்குதல் ஒன்றில் குறைந்தது 16 பேர் கொல்லப்பட்டதாக தில்லபெரி பிராந்தியத்தின் மேயர் ஹலிடோ லிபோவும், உள்ளூர் அதிகாரி ஒருவரும் தெரிவித்துள்ளனர்.

இப்பிராந்தியத்தின் தியெம் கிராமத்தில் வெள்ளிக்கிழமை பிரார்த்தனைகளின்போதே அடையாளந் தெரியாத துப்பாக்கிதாரிகள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாக றொய்ட்டர்ஸுக்கு லிபோ நேற்று முன்தினம் கூறியுள்ளார்.




வட ஆப்கானிஸ்தானில்

## 'மூன்று மாவட்டங்களை கைப்பற்றினோம்'

### தலிபானுக்கு எதிரான படைகள் தெரிவித்தன

பன்ஜ்ஷிர் பள்ளத்தாக்குக்கு அருகேயுள்ள மூன்று மாவட்டங்களைத் தாம் கைப்பற்றியுள்ளதாக, வட ஆப்கானிஸ்தானில் தலிபான்களுக்கு எதிராகப் போரிடும் படைகள் தெரிவித்துள்ளன.

எஞ்சியுள்ள ஆப்கானிஸ்தான் அரசாங்கப் படைகளும், ஏனைய ஆயுதக் குழுக்களும் பன்ஜ்ஷிர் பள்ளத்தாக்கிலேயே கூடியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பன்ஜ்ஷிருக்கு வடக்காகவுள்ள அயல் மாகாணமான பக்லனிலுள்ள டெஹ் சாலேஹ், பனோ, புல்-ஹெசர் மாவட்டங்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக ஆப்கானிஸ்தான் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் பிஸ்மிலாஹ் மொஹம்மடி தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், எப்படைகள் குறித்த நடவடிக்கையில் பங்கேற்றன என்பது தெளிவில்லாமலுள்ளது.

உள்ளூர் பொலிஸ் தளபதியொருவரை மேற்கோள்காட்டிய உள்ளூர் தொலைக்காட்சி அலைவரிசையான டொலோ நியூஸ், பக்லனிலுள்ள பனோ மாவட்டமானது உள்ளூர் ஆயுதப் படைகளின் கட்டுப்பாட்டில் உள்ளதாகவும், பலத்த உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளது.

இது குறித்து கருத்து எதனையும் தலிபான் தெரிவித்திருக்கவில்லை.

ஆப்கானிஸ்தானின் உப ஜனாதிபதி அம்ருல்லா சாலேயும், சோவியத் ஒன்றியத்துக்கு எதிரான முன்னாள் முஜாஹிதின் தளபதியான அஹ்மட் ஷா மசூட்டின் மகனான அஹ்மட் மசூட்டும் தலிபானுக்கு எதிராக பன்ஜ்ஷிரிலிருந்து செயற்படவுள்ளதாக தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.




## ஆங்கில கால்வாயில் 100 அகதிகள் மீட்பு

வட பிரான்ஸிலுள்ள கலைஸ் கரையோரத்துக்கு சற்றுத் தள்ளி ஏறத்தாழ 100 அகதிகள் மீட்கப்பட்டதாக உள்ளூர் பிரெஞ்சு கடலோர அதிகார சபை நேற்று முன்தினம் தெரிவித்துள்ளது.

ஆங்கிலக் கால்வாயைக் கடக்க முயன்றபோதே அகதிகள் இவ்வாறு மீட்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், அகதிகள் எங்கு வந்தனர் என அதிகாரசபை தெரிவித்திருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஆப்கானிஸ்தானில் நிலவும் சிக்கலான நிலைமை காரணமாக, ஐரோப்பாவை நோக்கிய அகதிகளின் அதிகரிக்கும் என பிரெஞ்சு ஜனாதிபதி இமானுவேல் மக்ரோன் இம்மாதம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.




த ஹன்ட்ரட்: மஹேல பயிற்சி அளித்த

# சதேர்ண் பிறேவ் சம்பியன்

இங்கிலாந்தில் நடைபெற்று வந்த இனிங்ஸுக்கு 100 பந்துகள் கொண்ட த ஹன்ட்ரட் தொடரில், இலங்கை அணியின் முன்னாள் தலைவரான மஹேல ஜெயவர்தன பயிற்சி அளித்த சதேர்ண் பிறேவ் சம்பியனாகியுள்ளது.

லோர்ட்ஸில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற இறுதிப் போட்டியில், பேர்மிங்ஹாம் போனிக்ஸை 32 ஓட்டங்களால் வென்றே சதேர்ண் பிறேவ் சம்பியனாகியிருந்தது.

**ஸ்கோர் விவரம்:**

நாணயச் சுழற்சி: பேர்மிங்ஹாம் போனிக்ஸ்

சதேர்ண் பிறேவ்: 168/5 (100 பந்துகள்) (துடுப்பாட்டம்: போல் ஸ்டேர்லிங் 61 (36), றொஸ் வைட்லி ஆ.இ 44 (19) ஓட்டங்கள். 2/8 (20), மொயின் அலி 0/5 (5), இம்ரான் தாஹிர் 1/33 (20), பென்னி ஹொவெல் 1/34 (20), லியாம் லிவிங்ஸ்டோன் 1/18 (10))

பேர்மிங்ஹாம் போனிக்ஸ்: 136/5 (100 பந்துகள்) (துடுப்பாட்டம்: லியாம் லிவிங்ஸ்டோன் 46 (19), மொயின் அலி 36 (30) ஓட்டங்கள். பந்துவீச்சு: தைமல் மில்ஸ் 1/13 (20), கிரேய்க் ஒவெர்ட்டன் 1/26 (20), ஜோர்ஜ் கர்டன் 1/27 (20), ஜேக் லின்டொட் 1/30 (20), கிறிஸ் ஜோர்டான் 0/38 (20))

போட்டியின் நாயகன்: போல் ஸ்டேர்லிங்

தொடரின் நாயகன்: லியாம் லிவிங்ஸ்டோன்

## 'ஜுவென்டஸிலிருந்து ரொனால்டோ விலகார்'



இத்தாலிய சீரி ஏ கால்பந்தாட்டக் கழகமான ஜுவென்டஸின் முன்கள வீரரான கிறிஸ்டியானோ ஜுவென்டஸிலிருந்து ரொனால்டோ விலகுவதை எதிர்பார்க்கவில்லை என ஜுவென்டஸின் முகாமையாளர் மஸ்ஸிமில்லியானோ அல்லெகிரி தெரிவித்துள்ளார்.

ஜுவென்டஸில் தான் தொடருவதாக தனக்கு ரொனால்டோ தெரிவித்ததாக அல்லெகிரி கூறியுள்ளார்.

ஸ்பானிய லா லிகா கழகமான றியல் மட்றிட், பிரெஞ்சு லீக் 1 கழகமான பரிஸ் ஸா ஜெர்மைன், இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான மன்செஸ்டர் சிற்றி ஆகியவற்றுக்கு ரொனால்டோ செல்லுவார் என கதைகள் உலாவியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஐ.பி.எல்லில் ஹஸரங்க, சமீர




இந்தியாவின் உள்ளூர் இருபதுக்கு -20 தொடரான இந்தியன் பிறீமியர் லீக்கின் (ஐ.பி.எல்) இவ்வாண்டுப் போட்டிகளின் இரண்டாவது பகுதிக்காக, றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூருடன் இலங்கையின் சகலதுறைவீரர் வனிடு ஹஸரங்க, வேகப்பந்துவீச்சாளர் துஷ்மந்த சமீர, சிங்கப்பூரின் சகலதுறைவீரர் டிம் டேவிட் ஆகியோர் இணைந்துள்ளனர்.

இந்நிலையில், பெங்களூரின் நியூசிலாந்து துடுப்பாட்டவீரர் பின் அலென், வேகப்பந்துவீச்சாளர் ஸ்கொட் குக்லஜின் மற்றும் அவுஸ்திரேலியாவின் வேகப்பந்துவீச்சாளர் கேன் றிச்சர்ட்ஸன், விலகியுள்ளனர்.




ஜேர்மனிய புண்டெலிஸ்கா தொடர்:

## பிரைபேர்க்கிடம் டொட்டமுண்ட் தோல்வி

ஜேர்மனிய கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான புண்டெலிஸ்கா தொடரில், எஸ்.சி பிரைபேர்க்கின் மைதானத்தில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 1-2 என்ற கோல் கணக்கில் பொருசியா டொட்டமுண்ட் தோற்றது.

பிரைபேர்க் சார்பாக, வின்சென்ஸோ கிறிஸ்போ, றொலன்ட் சல்லை ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றதோடு, டொட்டமுண்ட் சார்பாகப் பெறப்பட்ட கோலானது ஓவ்ண் கோல் முறையில் பெறப்பட்டிருந்தது.



ஸ்பானிய லா லிகா தொடர்:

## சமநிலையில் முடிவடைந்தது

ஸ்பானியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான லா லிகா தொடரில், அத்லெட்டிக் பில்பாவோவின் மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற அவ்வணிக்கும், பார்சிலோனாவுக்கும் இடையிலான போட்டியானது, 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.

பார்சிலோனா சார்பாகப் பெறப்பட்ட கோலை மெம்பிஸ் டிபே பெற்றதோடு, பில்பாவோ சார்பாகப் பெறப்பட்ட கோலை இனிகோ மார்ட்டினஸும் பெற்றனர்.

LK Newspapers Viber Community

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை, 23 ஒகஸ்ட் 2021, இல. 8, ஹுணுப்பிட்டி குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.